விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU- National Tamil Daily

மலர் 27 ஆடி 23 ஜுல்ஹஜ் 19 இதழ் 178

யாழ்ப்பாணம் புதன்கிழமை 7-8-1985

UNIVERSITY OF JAFFNA 07-8-1985 PERIODICALS LIBRARY

## வாகன சோதனை உடனடியாக ஆரம்பம்; தடைமுகாம்களிலும் சோதனை நடக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண குடாநாட்டில் வாகன சோதனைகள் உடன டியாக அமுலுக்கு வருகிறது. இராணுவ தடைமுகாம்களில் மீண்டும் வாகன சோதனை கள் நடைபெறவிருக்கிறது.

வாகனங்களை செலுத்தும் போது 85-ம் ஆண்டு லைசென்ஸ், வாகனப்பதிவுப் புத்தகம், ஆகியவற்றை வாகன உரிமையாளர்கள் கண்டிப்பாக வைத்திருக்க வேண்டும் என்று ராணுவ அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இவ்விரு பத்திரங்களுமின்றி எந்தவாகனமும் யாழ். குடா நாட்டுக்குள் சேவையில் ஈடுபடக் கூடாதென்றும், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாமதங்களைத் தவிர்ப்பதற்கும், சிரமம் எதுவுமின்றிப் பயணம் செய்வதற்கும் இவ்விருபத்திரங்களையும், இன்று முதல் வைத்திருக்குமாறு ராணுவத்தினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## தங்காலைச் சிறையிலுள்ள 33 தமிழ் இளைஞர்கள் 8ம் திகதி முதல் சாகும்வரை உண்ணாவிரதம்

(கொழும்பு)

தங்காலைச் சிறைச்சாலையிலுள்ள 33 தமிழ் இளைஞர்கள் வரும் 8ம் திகதி வியாழக்கிழமை யளவில் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போவதாக நம்பகமாக அறியப்படுகின்றது.

நாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்தவர்களான இவ்விளைஞர்கள் இதுவரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தப்படாததைக் கண்டித்தே இவர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளவிருக்கின்றனர்.

பயங்கரவாதத்தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டுள்ள இவ்விளைஞர்கள் அச்சட்டத்தின்படி 18 மாதங்களுக்குள் ஒரு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்செய்யப் படவேண்டும் என்றிருந்தபோதிலும் இதுவரை அதிகாரிகள் இதுபற்றி எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையாம்.

கடந்த மாதம் 26ம் திகதி இவ்விளைஞர்கள் பாதுகாப்பு ஆலோசனைக்குழுமுன் பிரசன்னமானபோதும் இன்னமும் இவர்கள் பற்றி எதுவித முடிவும் எடுக்கப்படவில்லையென்று கூறப்படுகின்றது.

## தனிநாடு கோரிக்கை கைவிடப்பட்டால் மாவட்ட சபைகள் ஒருங்கிணைய அனுமதி!

## யாழ். ஆஸ்பத்திரி டாக்டர்கள் தொகை 8

(கல்வியங்காடு)

யாழ். அரசினர் ஆஸ்பத்திரியில் 1,200 நோயாளரைப் பார்வையிட எட்டு டாக்டர்களே உள்ளனர்.

யாழ். அரசினர் வைத்திய சாலையின் வெளிநோயாளர் பகுதிக்கு நாளாந்தம் 1,200க்கும் அதிகமான நோயாளர் வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மாகாண இணைப்புக்குஇடமே இல்லை

### கட்சி எம். பிக்கள் மத்தியில் ஜே. ஆர். விளக்கம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் இணைவதை அரசாங்கம் எதிர்க்கிறது ஏனென்றால் இது நாடு பிரிவதற்கு வழிவகுக்கும்.

எந்த ஒரு தீர்வும் நாட்டின் ஒற்றை ஆட்சி முறையின் அடிப்படையிலேயே எடுக்கப்படும்.

திம்பு பேச்சுவார்த்தைகள், நாட்டின் மாவட்ட சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும் விடயத்தை சுற்றியே அமைந்திருக்கும்.

அரசாங்க சேவைகளுக்கு நாட்டின் இனவிகிதாசார அடிப்படையிலேயே ஆட்சேர்க்கப்படுவர். கல்வி, பல்கலைக்கழகப் பிரவேசமும் இவ்வாறே அமையும்.

தனிநாட்டு கோரிக்கையையும், வன்செயல்களையும் கைவிட்டால் மாவட்ட சபைகள் ஒருங்கிணைந்து செயல்பட அனுமதி.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன நேற்று அரசாங்க பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் உரையாற்றுகையில், இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் முகமாக நடைபெற்று வரும் முயற்சிகள் பற்றி குறிப்பிட்டுப் பேசுகையில் மேற்கண்ட அம்சங்களை வலியுறுத்தினார். (.ம் பக்கம் பார்க்க)




தமிழ்நாடு பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்துக்காக தமிழக முதல்வர் திரு. எம்.ஜி. ராமச்சந்திரன் ஜப்பானில் வாங்கியுள்ள கப்பல் இது.

## பூஸா இளைஞர் 528 பேர் விடுதலை—— சொந்த மாவட்டத்துக்கு 3 மாதத்துக்குச் செல்லத்தடை

(கொழும்பு)

பூஸா ராணுவமுகாமில் காவலில் வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்களில் 528 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

இவர்களின் விடுதலையை யொட்டி தெஹிவளைப்பகுதியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இவ்விளைஞர்களின் பெற்றோர் அங்கு அழைக்கப்பட்டு அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

3 மாதங்களுக்குச் சொந்த மாவட்டங்களுக்கு (8-ம் பக்கம் பார்க்க)

## தீவிரவாத தலைவர்களுடன் முஸ்லிம்குழு ஆலோசனை

(சென்னை)

தமிழ்நாடு வந்திருந்த முன்னாள் அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் முகம்மது தலைமையிலான முஸ்லிம் பிரமுகர்களின் தூதுக்குழு நேற்று நான்கு தீவிரவாத இயக்கங்களின் முன்னணியான தமிழ் ஈழத் தேசிய 8-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலைக்கழக—— பட்டமளிப்பு விழா 10-ம் திகதி நடைபெறும்

(அலுவலக நிருபர்)

யாழ் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா இம்மாதம் 10ம் திகதி நடைபெறும்போது பட்டம்பெறும் 571 பேரில் 387 பேருக்கு நேர்முகமாகப் பட்டங்கள் வழங்கப்படும்.

யாழ் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் சம்பிரதாய பூர்வமாக பட்டமளிப்பு விழா இம்மாதம் 10-ம் திகதி பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

[8-ம் பக்கம் பார்க்க]

## தமிழ்நாடு அரசின்—— 'தமிழ் அண்ணா' சரக்குக்கப்பல் இம்மாதம் தூத்துக்குடி வரும்

(சென்னை)

தமிழ்நாடு மாநில அரசின் சரக்குக் கப்பலான 'தமிழ் அண்ணா' இந்த வார இறுதியில் ஜப்பானிலிருந்து புறப்பட்டு இந்தியாவை வந்துசேரவுள்ளதாக மாநில அரசின் (8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரி விளம்பரம்

## விற்பனைக்கு

மினி சினிமாவுக்குரிய 42'' T. V. லென்ஸ் (Japan Blue) புத்தம் புதியது விற்பனைக்குண்டு (ஒன்று இரண்டு கைவசமுண்டு) நேரடிக் காட்சியறையில் பார்வையிடலாம். ஸ்ரான்லி மினி, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். 4900

வொக்ஸ் வாகன் கார் புதிய நிலையில் 4 சிறி 8000 ரூபா 22,500/- குளிர்சாதனப் பெட்டி ஆர் 80 ரூபா 6,250/- மாலை 3—6 மணி ஸ்கந்தராசா, கலைரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. 4903

சாப்பாட்டு மேசை, கதிரை, தட்டச்சு இயந்திரம், பெடஸ்றல் Fan, றேடியோ, 8 m. m. Projector. கமரா வீடியோ கஸட், ஆங்கில-தமிழ் இசைத் தட்டுக்கள், Two in one, வீணை, கிற்றூர் 275, பலாலி றோட், கந்தர்மடம். 4901

அங்கிளியா/பிறிபெக்றாரின் பல உதிரிப்பாகங்கள் புதியன/பழையன மலிந்த விலையில் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: குணராசா, சேச் லேன், கொக்குவில் கிழக்கு அல்லது ஜெமேகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 4896

Ford Prefect வெள்ளை நிற E N Series கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும். N. சிவஞானம், ஞானவாசம், வட்டு கிழக்கு, வட்டுக்கோட்டை. 4899

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம் கேள்வி அறிவித்தல்

கோணந்தோட்ட வீதி மீன் சந்தை, நவீன சந்தை துவிச்சக்கர வண்டி பாதுகாப்புநிலையம் ஆகியவற்றை 15-08-85ம் திகதி முதல் குத்தகைக்குக் கொடுப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற ஆணையாளரால் 14-08-85ஆம் திகதி புதன் கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விகள் மீளளிக்கக்கூடிய கேள்விப் பிணை ரூ. 1000/ம் மீளளிக்கப்படாத கேள்விப்படிவக்கட்டணம் ரூ 50/ம் செலுத்துவதன் பேரில் 13-08-85 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-00மணிவரையும் வழங்கப்படும் படிவங்களின் இணைப்பிரதிகளில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவங்களை உள்ளடக்கும் கடித உறையின் இடதுபக்க மேல்மூலையில் சந்தை அல்லது நிலையத்தின் பெயர் குறிப்பிடப்பட்டு கடித உறை அரக்கு முத்திரையிடப்பட்டு மாநகராட்சி மன்றத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்த்தல் வேண்டும் அல்லது பதிவுத்தபால்மூலம் 14-08-85ம் திகதி நண்பகல் 12-00மணிக்கு பிந்தாமல் மாநகர ஆணையாருக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

இக்கேள்விகள் சம்பந்தமான இதர விபரங்களை யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற நாணுவித இறைவரிக்கிளை (சிறும்பியடி) அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

சீ. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
5-8-85 4893

## தேவை

யாழ். நகரிலுள்ள எமது நிறுவனத்தில் Accounts/Audit பயிலுனராகச் சேர விரும்புவோர் சகல விபரங்களுடன் சொந்த கையெழுத்தில் விண்ணப்பம் செய்யவும். முடிவு திகதி 10-8-85. விளம்பர இல: 4902, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 4902

யாழ்ப்பாணத்தில் புதிதாக தொடங்கப்படவிருக்கும் சவர்க்காரத் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள தொளிலாளர் தேவை. விளம்பர இலக்கம் 4874, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். (4874]

## வாடகைக்கு

கொக்குவில் பழைய புகையிரத நிலையத்திற்கு அண்மையில் பல்கலைக்கழக மாணவிகளுக்கு சாப்பாட்டுடன் விடுதி வசதிகள் வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: க. பரராஜசிங்கம் இளைப்பாறிய புகையிரத பாதுகாவலர், புகையிரதவீதி, கொக்குவில் கிழக்கு. (4871)

## கல்வி

Radio and Electronic Engineering சனி, ஞாயிறு காலை வகுப்புக்கள், பெண்களுக்கான பிரிவு 10-8-85 சனி காலை 9 மணிக்கு ஆரம்பமாகிறது. தொடர்புகொள்க: பொறியியல் கல்வி நிலையம், 22, ராமையா செட்டியார் லேன், சாந்தி சினிமா அருகாமை, யாழ்ப்பாணம். (4879)

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



**செல்வன் பிரிஷாந்தன்**

புத்தூர் ஆஸ்பத்திரிவீதியைச்சேர்ந்த தவராசா ரஞ்சினிதம்பதிகளின்செல்வப் புதல்வன் பிரிஷாந்தன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (7-08-85) தனதில்லத்தில் கொண்டாடுகின்றார். சாந்தனை கனடாவிலிருக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மையா, அம்மம்மா, அன்ரிமார், மாமன்மார், பூட்டன், பூட்டி, பம்பாய் பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், அத்தைமார், கொலண்ட் மாமா, பெரியமாமா குடும்பத்தினர் அம்பாள் திருவருளால் சகல கலைகளும் கற்று சீரும் சிறப்புமாக பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள். 4907

**வியாபாரம் பெருக விளம்ரம் செய்க**

## முற்றிலாக் கட்டளையின் விளம்பரம்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில்

சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த காலஞ்சென்ற வனிதா ரவீந்திரனின் மரணசாதனமற்ற மரணச்சொத்து சம்பந்தப்பட்ட விடயம்.

காலஞ்சென்றவர்

இல. 227/T

அத்துடன்

சிவில் நடைமுறைக் கோவை (அதி. 101) இன் 530ஆவது இலக்கப் பிரிவின் கீழ் செய்யப்படும் விண்ணப்பம் சம்பந்தமான விடயம்.
சாவகச்சேரி, கச்சாய்வீதியைச்சேர்ந்த லலிதா பாலகிருஷ்ணன்.

மனுதாரி

எதிர்

பராயமடையாதவர்
1. சாவகச்சேரி, கச்சாய்வீதியைச் சேர்ந்த ரவீந்திரன் கபிலன். இவர் பராயமடையாதவராகையால் அவரின் வழக்குப் பாதுகாவலராகிய 2-ம் எதிர்வாதிமூலம் தோற்றுகிறார்.
2. சாவகச்சேரி, கச்சாய்வீதியைச் சேர்ந்த க. இ. ஜெயக்குமார்

எதிர்வாதிகள்

இத்தால் விளம்பரப்படுத்துவது என்னவெனில் மேற்பெயரிட்ட காலஞ்சென்றவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்குறிப்பிட்ட நீதிமன்றத்தில் மேற்குறிப்பிட்ட இலக்கமிடப்பட்ட மரணசாதன வழக்குத் தொடரப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அவ்வழக்கில் முற்றிலாக் கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் கட்டளையிடப்படுவது என்னவெனில் மரணச் சொத்துவரி செலுத்தப்பட்டு உத்தியோகச் சத்தியம் எடுக்கப்பட்டதும் மேற்பெயரிட்ட மனுதாரி அவரின் பெயருக்கு மரணச்சொத்து நிருவாகப்பத்திரம் வழங்கப்படுவதற்கு உரிமையுடையவர் என்று இத்தால் வெளிப்படுத்தப்படுகிறது.

பராயமடையாதவராகிய மேற் பெயரிட்ட 1ம் எதிர்வாதியின் வழக்குப்பாதுகாவலராக மேற்பெயரிட்ட 2ம் எதிர்வாதி நியமிக்கப்படுகிறார் என்றும் குறிப்பிட்ட பராயமடையாத 1ம் எதிர்வாதியும் அவரின் வழக்குப் பாதுகாவலராகிய 2ம் எதிர்வாதியும் இம்மன்றின் முன் 1984 ஐப்பசி 24ம் திகதி அல்லது இம்மன்றினால் பின்போடப்படும் தேதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றின்முன் தோன்றவேண்டும் என்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் 1984 ஐப்பசி 24ம்தேதி அல்லது இம்மன்றினால் பின்போடப்படும் தேதி முற்பகல் 9-00 மணிக்கு இம்மன்றின் முன் தோன்றி இம்முற்றிலாக் கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படக் கூடாது என்பதற்கு காரணம் காட்டவேண்டும் என்றும் இத்தால் கட்டளையிடப்படுகின்றது.

நீதிமன்றத்தின்கட்டளைப்படி 1984 மார்கழி 18ம் தேதியாகிய இன்று.

பதிவாளர்.

தவணை 9-8-85க்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆ. குணநாயகம்
பதிவாளர்.

19-7-85.
மனுதாரின் சட்டத்தரணி
கா. பாக்கியலிங்கம்
(4644)

## வெற்றி

(உடுவில்)

உடுவில் ஏஷியன் விளையாட்டுக்கழக ஆதரவில் விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான மென் பந்துகிரிக்கெட் போட்டிகள் அண்மையில் ஏஷியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் அதிக புள்ளிகளை பெற்று முதலாவது இடத்துக்கான வெற்றிக் கிண்ணப்பரிசை சண்டிலிப்பாய் எஸ் பி. கோ விளையாட்டுக்கழகம்பெற்றுக்கொண்டது சிறந்த துடுப்பாட்டக்காரர் பந்துவீச்சுக்காரருக்கான பரிசுகளை கலைஒளி விளையாட்டுக் கழகத்தைச்சேர்ந்த திரு. கருணாகரன் திரு. துஷ்யந்தன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

மு. க. முத்துக்குமார்,
சட்டத்தரணி,
பருத்தித்துறை:

## பின்முற்றுகும் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில்

பருத்தித்துறை வியாபாரிமூலையைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா கைம்பெண் பறுவதவர்த்தினிப் பிள்ளை என்பவரது மரணசாதனமில்லா சொத்து விடயத்தில்

— மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்க வழக்கு இல: } T 1222

முத்தையா கதிரவேற்பிள்ளை,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

— மனுதார்

எதிர்

(1) முத்தையா குமாரலிங்கம்,
(2) முத்தையா காசி விசுவநாதன் இருவரும்
வியாபாரிமூலை,
பருத்தித்துறை.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோன முத்தையா கைம்பெண் பறுவதவர்த்தினிப்பிள்ளையின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்முற்றுகும் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள எவரேனும் 1985ம் ஆண்டு ஆவணி மாதம் 23-ம் திகதி அன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின் முற்றுகும் கட்டளை ஏன் முற்றுனதாக்கப் படலாகாதென்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகிறார்.

1985-ம் ஆண்டு ஆனி மாதம் 19-ம் திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி
ச. நடராசா,
பதிவாளர்.

வரைவு:
மு. க. முத்துக்குமார்,
(ஒப்பம்)
மனுதாரின் சட்டத்தரணி: 4898

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யாழ். குருநகர் சந்தைக்கு சுருக்கு கேற் செய்து பொருத்துதல், தளபாட விநியோகம், மற்றும் அமைப்பு வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் வேலைகளுக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சிமன்ற ஆணையாளரால் 16-08-1985ம் திகதி வெள்ளிக் கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. செங்குந்தா சந்தைக்கு சுற்று மதில் அமைத்தலும் கேற் செய்து பொருத்துதலும்.
02. குருநகர் சந்தைக்கு இரும்புச் சுருக்கு கேற் செய்து பொருத்துதல்.
03. கன்னாதிட்டியில் மின்சாரப்பகுதிக்கு உபஅலுவலகமும் களஞ்சியமும் அமைத்தல்.
04. ஆரம்ப பாடசாலை தளபாடங்கள் விநியோகித்தல்.

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து 15-08-85ம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12-00 மணி வரை ஒவ்வொரு கேள்விக்கும் கேள்விப் படிவக்கட்டணமாக ரூபா 150/-ம் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 500/-ம்செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப்பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சிமன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சீ.வீ.கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01-08-85. 4908

## ஓராண்டு நினைவஞ்சலி

### அமரர் திரு. கந்தையா



மலர்வு:
22-2-1919

உதிர்வு:
20-7-1984

எம்மையெல்லாம் ஆக்கிய
எம் ஒளிவிளக்கு இறை அடி அடைந்து
ஓராண்டானாலும் எம் நெஞ்சங்களில்
எண்ணற்ற இனிய நினைவுதனை நிலைக்கவிட்டு!
காலமெலாம் நின் பிரிவுதனை நினைத்து ஏங்கவிட்டு!
எமைப் பிரிந்த எமதன்புத்தந்தையே!
நீங்கள் எமைவிட்டுப் பிரிந்தாலும்
உங்கள் அன்புருவம் என்றும்
எம்மை விட்டகலாது.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்:
அத்தியடி, யாழ்ப்பாணம்; (4905)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ அணுக்குண்டு அழிவின் 40 ஆண்டு

# ஜப்பானில் பின்விளைவுகளால் இதுவரை 4,200 பேர் பலி!

## அமெரிக்கா-ரஷ்யாமீது ஹிரோஷிமா மேயர் பலத்த கண்டனம்

டோக்கியோ, ஆக-6

**1945ம் ஆண்டு ஆகஸ்ட் 6-ம் திகதி முதல் தடவையாக அணுக்குண்டு போடப்பட்டதை யடுத்து அதன் பின்விளைவுகளால் இதுவரை 4,200 பேர் ஜப்பானில் கொல்லப்பட்டுள்ளனர். இத்தொகையுடன் சேர்த்து நாகஸாக்கி, ஹிரோஷிமா அணுக்குண்டு வீச்சுக்களினுல் இறந்தோர் எண்ணிக்கை சுமார் 1 லட்சத்து 38 ஆயிரமாக அதிகரித்துள்ளது என்று அறிவிக்கப்பப்டுள்ளது.**

ஜப்பானின் ஹிரோஷிமா நகரில் முதலாவது அணுக்குண்டு வீசப்பட்ட 40வது பூர்த்தி அனுஷ்டிக்கப்பட்டது

இதுகுறித்த வைபவங்கள் மனதைத் தொடுவனவாக அமைந்திருந்தன. ஜப்பானின் அனைத்துப் பகுதியிலிருந்தும் சுமார் 50 ஆயிரம்பேர் இந்த வைபவங்களில் கலந்துகொண்டனர்.

'சமாதான மணி' அடிக்கப்பட்டதையடுத்து அனைத்து அனுதாபிகளும் அணுக்குண்டு வீச்சுக் குறித்த பிரார்த்தனைகளை ஆரம்பித்தனர்.

இதனைத் தொடர்ந்து நாகஸாக்கி மேயர் திரு தக்காஷி அராக்கி இந்த 40-வது பூர்த்தி வைபவத்தைத் தொடக்கி வைத்தார்.

திரு அராக்கி கூறியதாவது:- ''சோவியத், அமெரிக்கா போன்ற பிரதான அணுசக்தி வல்லரசுகள் அணு ஆயுதக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளவேண்டும்.

இந்த இரு நாடுகளும் அணு ஆயுதப் பரிகரண மகாநாடுகள் என்று கூறிக்கொண்டு தமது அணு யுத்த பலத்தை அதிகரித்து வருகின்றன. அவை இதனைத் தடைசெய்யவேண்டும்.

அணு ஆயுதங்களையும், குண்டுகளையும் அழிப்பதற்கு நாம் எம்மை அர்ப்பணிப்போம்'' என்றார்.

ஜப்பானியப் பிரதமர் திரு நாகஸோனேயும் அணு ஆயுத உற்பத்திக்கெதிரான ஜப்பானிய அரசின் எதிர்ப்பை மீண்டும் வலியுறுத்தினர்.

இந்த 40-வது வருடப் பூர்த்தியில் 'ஹிரோஷிமா-நாகஸாக்கி' அணுகுண்டு வீச்சுகளின் பின்விளைவுகளினுல் 4,200 பேர் இதுவரை கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு அஞ்சலியும் செய்யப்பட்டது.

இத்தொகையுடன் சேர்த்து ஜப்பானில் அணுக்குண்டு வீச்சுக்களினுல் மாண்டோர் எண்ணிக்கை சுமார் 1 லட்சத்து 38 ஆயிரமாக அதிகரித்துள்ளதென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## பொதுக்கூட்டம்

(மாவிட்டபுரம்)

கீரிமலைக் கிராமத்திற்கென கிராம அபிவிருத்திச்சங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பான பொதுக்கூட்டம் இம் மாதம் 10ம் திகதி கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

கீரிமலைப்பகுதி பொதுமக்களின் வேண்டுகோளுக்கமைய இக்கூட்டத்தை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வலி. வடக்கு கிராம அபிவிருத்தி அதிகாரி திரு க. ஸ்ரீபதி தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.

## புதிய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்

(கொழும்பு)

கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் தி. பி. இராமநாதன் மேன் முறையீட்டு நீதிமன்ற நீதியரசராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதியரசர் பி. இராமநாதன் நேற்று முன்தினம் ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்

புதிய நீதியரசரை வரவேற்பதற்காக நாளை மறுதினம் மேன்முறையீட்டு நீதிமன்ற சம்பிரதாயபூர்வமான அமர்வு இடம்பெறவுள்ளது

## பிரதான சோதனைகள் முடிந்ததும்

# அமெரிக்கா அணுசக்தி பரிசோதனைகளை நிறுத்தும்!

## — றீகன்

வாஷிங்டன், ஆக-6

''தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் பிரதான அணுசக்திப் பரிசோதனைகள் முடிவடைந்ததும் அமெரிக்காவும் தனது அணுசக்திப் பரிசோதனைகளை நிறுத்திவைக்கும்'' என்று அதிபர் றீகன் தெரிவித்தார்.

ஜப்பான் அணுகுண்டு வீச்சின் 40-வது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு சோவியத் யூனியன் ஆகஸ்ட் 6-ம் திகதி முதல் இந்த ஆண்டின் இறுதி வரை தனது அணுசக்திப பரிசோதனைகளை நிறுத்திவைத்துள்ளது. அமெரிக்காவையும் அப்படிச் செய்யும்படி கேட்டிருந்தது

இதற்குப் பதிலளித்தபோதே திரு றீகன் மேற்கண்டவாறு தெரிவித்தார் தமது சத்திரசிகிச்சையின் பின்னர் முதற் தடவையாகப் பத்திரிகையாளர் முன் தோன்றி இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா அதன் அணுசக்திப் பரிசோதனைகளைத் தற்போது உடனடியாக நிறுத்திவிட முடியாது

சோவியத் யூனியன் அதற்கு வேண்டிய பிரதான அணுசக்திப் பரிசோதனைகளை நிறைவு செய்துவிட்டது இதனுல் அது தனது புதிய பரிசோதனைகளை இடை நிறுத்தியுள்ளது.

ஆனல் அமெரிக்கா அதன் பிரதான சோதனைகளை இன்னும் நிறைவு செய்யவில்லை. இதனுல் தற்போது அதன் பரிசோதனைகளை இடை நிறுத்த முடியாது.

எனவே, பிரதான சோதனைகள் முடிவடைந்ததும் அமெரிக்காவும் அதன் புதிய பரிசோதனைகளை இடைநிறுத்தும்'' என்ருர்.

எப்போது அப்பரிசோதனைகள் இடைநிறுத்தப்படும் என்பதை அவர் கூறவில்லை. (கி)

## வெளிநாட்டு நாணயக் கடத்தல்

# மூன்று வர்த்தகர்களை பொலிஸார் தேடுகின்றனர்

(கொழும்பு)

வெளிநாட்டு நாணயங்கள் கடத்தல் தொடர்பாகக் கொழும்பைச் சேர்ந்த மூன்று பிரபல வர்த்தகர்களைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் இரகசியப் பொலிசார் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர்

சென்ற சனிக்கிழமை 35 இலட்சம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு நாணயங்களும் வெளிநாட்டு பயணக்காசோலைகளும் மாலைதீவு சென்ற ஒரு பிரயகணியிடமிருந்து கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்தே இந்த மூன்று வர்த்தகர்களும் தேடப்பட்டு வருகின்றனா. இந்தப் பிரயாணி மாலைதீவுப் பிரஜையாவார்

மூன்று வர்த்தகர்களின் வீடுகளையும் சோதனையிட்ட இரகசியப் பொலிசார் பல முக்கிய த்ஸ்தாவேஜுகளைக் கைப்பற்றினர். இதேவேளை மூன்று வர்த்தகர்களும் தலைமறைவாகிவிட்டனர். (பி)

## 'சோயுஸ்-7' விண்கலத்தில் ஆபத்து

# திருத்த வேலைகளை முடிந்தபின்பே சோவியத் விபரம் வெளியிட்டது!

## விண்வெளி வீரர்களும் காப்பாற்றப்பட்டனர்

மாஸ்கோ ஆக 6,

சோவியத் யூனியனின் விண்வெளி ஆராய்ச்சிக் கலமான சோயுஸ்-7 இயந்திரக் கோளாறில் பழுதுபட்டதையடுத்து அதிலிருந்த சோவியத் விண்வெளிவீரர்கள் பலத்த சிரமத்துக்குள்ளாகி தற்போது உயிராபத்திலிருந்தும் தப்பியுள்ளனர் என்று கூறப்பட்டது.

சோயுஸ் 7'ன் இக்கோளாறு பற்றி சோவியத் யூனியன் எதனையும் வெளியிடவில்லை. தற்போது அது சீர் செய்யப்பட்டதையடுத்தே சகலவிபரங்களும் மாஸ்கோவினுல்வெளியிடப்பட்டன

கடந்த மார்ச் மாதம்முதல் சோயுஸ்7' ஸ்தம்பிதமாகிற்று இதனுல் அதனுடனுன பூமியின் வானெலித் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன இத்துண்டிப்பை யடுத்து சோவியத் யூனியன் ஒரு விண்வெளிராக்கெட்டை இரு வீரர்களுடன் விண்வெளிக்கு கடந்தயூனில் அனுப்பியது அப்பயணத்தை ஒருசாதாரண பயணம்என்றே சோவியத் கூறியது.

ஆனல் சோயுஸ் 7'ன் கோளாறைத் திருத்தவே இப்பயணம் மேற்கொள்ளப்பட்டது.

இதில் சென்ற இருவீரர்களும் மிகவும் அனுபவம்வாய்ந்த விண்வெளி பயணம் செய்தவர்கள் [illegible] ஆராய்ச்சியாளர்களாவார்

இவர்கள் சோயுஸ்7 உடன் தமதுகலத்தை இணைத்து அதனுள் சென்றனர் அங்கே அதன் பட்டரிகள் இயங்காததையும் தண்ணீர் விநியோகம் பாதிப்படைந்துள்ளதையும் அறிந்தனர் இதனுல் அதனுள்ளிருந்தவீரர்களும் சோர்வடைந்தனர்.

தொடர்ந்து சோயுஸ்7' விண்கலம் பூமியிலிருந்துவந்தபுதிய கலத்தின் 10 நாட்களின் திருத்தப் பணியை யடுத்து வழமைக்கு திரும்பியது அதிலிருந்த வீரர்களும் உயிர்காப்பாற்றப் பட்டனர்.

விண்வெளியில் நீண்டநாட்களைக் கழித்துள்ள விண்வெளிக்கலமாக சோயுஸ்7' விளங்குகிறது.

இந்தியவீரர் ராகேஷ்சர்மா உட்பட பலவிண்வெளி வீரர்கள் இக் கலத்தினுள்ளேயே சென்று ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். (கி)

## சோவியத் புத்தகங்களின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சோவியத் புத்தகங்களின் கண்காட்சியும் விற்பனையும் பல இடங்களில் நடத்துவதற்கு மக்கள் பிரசுராலயத்தின் யாழ்ப்பாணக் கிளை ஏற்பாடுகள் செய்துள்ளது

சென்றவாரம் உரும்பராய் பலநோக்கிக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இக்கண்காட்சியும் விற்பனையும் இடம்பெற்றன இம்மாதம் 25-ம் திகதி தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் புத்தகக் கண்காட்சியையும் விற்பனையையும் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தொடர்ந்து வேலணை, வட்டுக்கோட்டை, பண்டைத்தரிப்பு, வதிரி ஆகிய இடங்களில் இக் கண்காட்சி இடம்பெறவுள்ளது.

## மயிலிட்டி வடக்கில்

# தடைப்பட்டிருந்த மின் விநியோகவேலைகள் ஆரம்பம்

(மாவிட்டபுரம்)

பல ஆண்டுகளாகத் தடைபட்டிருந்த மயிலிட்டி வடக்குப் பகுதிக்கான 5 லட்சம் ரூபா செலவிலான மின் விநியோகத் திட்டவேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன

ஆசிய அபிவிருத்தி வங்கிநிதியுதவியுடன் காங்கேசன் துறைத் தொகுதியில் நான்கு மின் விநியோகத் திட்டங்களை மேற்கொள்ள 78ம், 79ம் ஆண்டுகளில் அச்சமயம் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு அ. அமிர்தலிங்கம் சிபார்சு செய்திருந்தார்.

இவற்றில் அளவெட்டி சித்தியம்புளியடி, ஏழாலை ஆகிய பகுதிகளுக்கான மின் விநியோகத் திட்டவேலைகள் ஏற்கனவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன,

ஆனுல் மயிலிட்டி வடக்குப் பகுதிகான மின் விநியோகத் திட்டவேலைகள் பல ஆண்டு ஆண்டுகளாகத் தடைபட்டிருந்தது

5 லட்ச ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இம்மின் விநியோகத் திட்ட வேலைகள் இலங்கை மின்சார சபையினரால் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கூடிய விரைவில் இவ்வேலைகளைப் பூர்த்தி செய்வதற்காக வேலைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றேயல்
பேக்கிங் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு-13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

பல பல புத்தகங்கள் தயாரிப்பதற்கு முடிவே இல்லை; அதிகப் படிப்பு உடலுக்கு அலுப்பு:

—பைபிள்

நமது நோக்கு

# வைத்திய நிபுணர்சேவை: நிலைமை திருந்துமா?

டாக்டர்களுக்கு வெளிநாடுகளில் நல்லகிராக்கி இருந்து வந்ததால், இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலிருந்து அநேகம் பேர் அனுப்பப்பட்டனர்.

1950- 70 காலவரையில் வெளிநாட்டு டாக்டர்களுக்கு அமெரிக்காவிலிருந்த தேவை இன்று வெகுவாகக் குறைந்துவிட்டது. அங்கு எவ்வித ஆதரவுமில்லையென்றே சொல்லலாம்.

பிரிட்டனிலும் இதனை விடமோசமான நிலை. எப்படியாவது இந்தச் சுவர்க்கத்தை அடைய முடியுமானால்பிற பின்னென்ற பேராசையில் பலர், இன்றும் போய்க் கொண்டிருக்கின்றனர்.

பல வருடம் படித்து, பயிற்சிபெற்று நாட்டின் செல்வத்தில் பட்டம் பெற்று, சொந்த நாட்டுச் சேவையென்பதை முற்றும் துறந்து பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு வெளியேறும் பல டாக்டர்கள் இன்று அங்கே வேறு தொழில் பார்க்கநேரிடுகின்றது.

நாட்டைவிட்டு வெளியேற பல காரணங்கள் இருக்கலாம்; ஆனால் முதன்மையானது உயர்ந்த ஊதியத்துடன் தொல்லையற்ற உயர்தர வாழ்க்கை நடத்தலாமென்பதே.

எங்கு சென்றாலும் டாக்டர்களின் பணி மகத்தானது; கடும் உழைப்புக்குரியது என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஆனால் சொந்த நாட்டுக்குக் கடமைப்பட்டவர்கள், வேலையின்மை என்றொரு காரணத்தைத் தவிர, எடுத்த எடுப்பில் வெளிநாடு செல்வதானால் அது அதர்மச் செயலென்றே கொள்ளவேண்டும்.

எங்கள் நாட்டில், குறிப்பாகத் தமிழ்ப் பகுதிகளில் மருத்துவ சேவை விரிவாக்கப்படவேண்டுமென்றும், திருத்தமடையவேண்டுமென்றும் பல நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.

ஊருக்கு ஊர் மருத்துவசாலை, ஆதார வைத்தியசாலைத் திட்டம், மாகாண பெரியாஸ்பத்திரிகள், கயரோகம், புற்றுநோய் நிலையங்கள் அமைக்கப்பட்டு வந்தன மாகாண பெரியாஸ்பத்திரிகளிலேயே விசேட பிரிவுகள்.

இத்தகைய முன்னேற்றத் திட்டங்கள் இன்று என்ன நிலையில் காணப்படுகின்றன? மருந்துத் தட்டுப்பாடு காலத்திற்குக் காலம் ஏற்பட்டாலும் இறக்குமதியால் அதனைச் சமாளிக்கலாம். டாக்டர்கள் வெளியேறினால் என்ன செய்யமுடியும்? தெல்லிப்பழை புற்றுநோய் நிலையத்தின் பரிதாபக் கதை நாமறிந்ததே.

நிபுணர்களின் விடயம் சற்று வேறுபட்டது; ஒன்று, தங்கள் திறமைக்கேற்ற வசதிகள் இல்லாதிருப்பதும், என்றும் மாற்றமடையும் இத்துறையில் தொடர்பான கல்வியும் பயிற்சியும் தேவைப்படுவதும், இந்நாட்டு வைத்திய நிபுணர்களின் நியாயமான குறைபாடுகள்.

மற்றது, நாம் தமிழர்கள் என்பதால் இன்று எங்கள் சேவைக்கேற்ற வசதியின்மை, பாகுபாடு - ஏன் பாதுகாப்பு என்ற காரணங்களும் உண்டு.

அவையென்னவானாலும், சாதாரண மருத்துவப்பட்டதாரி - MB.,BS. தொழில் மார்க்கெற் மாற்றங்களால் வளத்தில் வருவர். அவருடைய வெற்றிடத்தைத் தற்காலிகமாகச் சமாளிக்க முடியும்.

ஆற்றலும் அனுபவமும் பெற்ற வைத்திய நிபுணர்கள் கதை வேறு; அவர்கள் பொற்றூலிகள், அவை போனால் எல்லாம் போம்.

யாழ்ப்பாணத்தின் பெரிய ஆஸ்பத்திரி மட்டுமல்ல, பல ஆதார வைத்தியசாலைகள், மாவட்ட மருத்துவமனைகள், தனியார் நிறுவனங்கள் கூட நிபுணர் வெளியேற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ளன. மூர்த்தி இல்லா ஆலயங்கள் இவை.

மருத்துவ உபகரணம் தளபாடம் இன்னும் திருப்தியான நிலைக்கு உயராத போதும், பல திருத்தங்கள் இத்துறையில் செய்யப்பட்டன; ஆனால் இன்று டென்மார்க் அரசன் இல்லாத ஹாம்லெட் நாடகமே எங்கும் நடிக்கப்பட்டு வருகிறது.

மேனாட்டு மருத்துவம் அடைந்திருக்கும் அற்புத முன்னேற்றம் அமெரிக்காவில் பெருமளவு காணப்படுகிறது. ஒரு உதாரணம் கொண்டு எங்கள் நாடுகளின் - இலங்கை, இந்தியா— பின்தங்கிய நிலை விளக்கப்படுகிறது. கிட்னி நோயாளருக்குரிய சாதாரண சத்திர சிகிச்சை— Haemodialysis— இந்தநாடுகளில் பரவவில்லை. இன்னும் பல மார்பு நோய்களுக்குரிய வைத்தியமுறைகள் நிபுணர்கள் அறிய வேண்டியவை.

இன்று இந்தத்தேவையை தனிப்பட்டவர்கள் தங்கள் முயற்சியால் நிறைவேற்றுகின்றனர். நிலைமை இதனால் எவ்வாறு திருந்தும்?

பாரதப் பிரதமர் காலஞ்சென்ற இந்திரா காந்தி இந்தக் குறையை நிவர்த்தி செய்ய 1982ல் அவர் மேற்கொண்ட அமெரிக்கவிஜயத்தில் அருமையான ஒரு திட்டத்துக்கு அடிகோலியிருந்தார்.

நிபுணர்கள் வெளியேற்றம் அடிதலைமாறியதிட்டம் அது. இங்கிருந்து அமெரிக்கா செல்லாது, காலத்துக்குக் காலம் அங்கு பயிற்சி பெற்ற இந்திய திறமைசாலிகள் சொந்தநாட்டு பிரபல வைத்திய நிலையங்களில் தங்கள் சகாக்களுக்கு தங்கள் அநுபவத்தை பகிர்ந்தளித்தல்; குறுகிய காலப்பயிற்சி அளித்தல்.

திம்புவில் என்னநடந்தாலென்ன; நாம் தமிழரோ, சிங்களவரோ இந்த நாட்டின் சுகாதாரத்துக்குப் பொறுப்பானவர்கள் இத்தகைய முறையை அநுட்டித்தாலென்ன?

நோய் விடயத்தில் நாட்டின் நிலை, உண்மைப்பயங்கரவாதம்; எனவே அரசு ராணுவ சேவையில் பொருளாதார விரயம் செய்த போதும் பொறுப்புடைய மருத்துவ சங்கங்கள் இவ்வித திட்டத்தால் சேவையில் ஈடுபட்டிருக்கும் நிபுணர் வெளியேறுவதைத் தடுக்கலாம். [illegible] பாதுகாப்பு அது.

# "தமிழ் மாணவரின் துயரம் தீர்க்க வழிசெய்யுங்கள்!"

## பிரதமர் ராஜீவுக்கு யாழ் மாணவர்கள் அனுப்பிய மகஜர்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் தமிழ்பேசும் மாணவர்கள் படும்துன்பங்களை விளக்கி அதற்கு ஆவனசெய்யுமாறு கோரி யாழ். மாவட்ட உயர்தர பாடசாலைகளில் கல்வி கற்கும் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கையெழுத்திட்ட மகஜர் ஒன்றை இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ளனர். இந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை இங்கே தருகிறோம்:

இலங்கை, பிரித்தானியாவின் குடியேற்ற நாடாக இருந்து 1948ல் சுதந்திரம் அளிக்கப்பட்டபோது இங்கு இருந்த தலைவர்கள் எவரும் தீர்க்கதரிசனமாக சிந்திக்காமையினாலும், பிரித்தானிய அரசு தனது பெருந்தோட்டத் தொழிலை கைவிட்டுச் சென்றதனாலோ அல்லது தமது நலன்கள் முடிவடைந்துவிட்டது என்ற எண்ணத்தினாலோ சட்டத்தில் இவ் இனப்பிரச்னை பற்றி வரையறை எதுவும் செய்யாது சென்றதனாலும், ஜனநாயகத்தில் உள்ள பெரிய குறைபாடாகிய பெரும்பான்மையினரின் முடிவே இறுதி முடிவு என்ற காரணத்தினால் தமிழ்மக்கள் பல இனக்கலவரங்களின் போது, சிங்களக் காடையர்களினாலும், அரச ஆயுதப்படையினராலும் தொடர்ச்சியாக, கொள்ளை, தீவைப்பு, கற்பழிப்பு, கொலை போன்றவற்றினால் பாதிப்படையும்போது, கல்விக்கொள்கையினால் விரக்தியடைந்த இளம் சமுதாயம் இச்சம்பவத்தினால் மேலும் விரக்தியின் உச்சக்கட்டத்தை அடைந்து அடக்குமுறைக்கு அடக்குமுறையே சரியான பாதை என ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியது. இதற்கு முழுப்பொறுப்பையும் இலங்கையைத் தொடர்ந்து ஆண்ட ஐ. தே. கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மற்றும் கூட்டுமுன்னணியில் இடம்பெற்ற கட்சிகளைச்சாரும். இத்துடன் பல இனம், பல மதம் இருக்கும் நாட்டில் தனி ஒரு மொழி, தனி ஒரு மதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்த தவறினால்தான் இன்று ஒற்றுமையுடன் வாழ்ந்த இருபெரும்இனத்தை கூறுபோட்டு ஒரு இன மக்களுக்கு, இன்னோர் இனமக்கள் அஞ்சிவாழவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இதை அரசு குறைப்பதைவிட்டு ஒருதலைப் பட்சமாகமுடிவுகளையும், வெகுஜனத்தொடர்பு சாதனத்தையும் பயன்படுத்தி பாமரமக்களைத் திசைதிருப்பி மத இன வெறியை ஊட்டி தமது அரசியல் இலாபத்தை அடைய முற்பட்டதனாலும் இன்றுஇறுதியில் ஒருவரும இலாபமடையவில்லை. பெருமளவுநட்டத்தையும், பெருமளவு பொருளாதார, உயிர் அழிவுக்கு வழி வகுத்துக்கொண்டு இருக்கின்றது. பிறப்புரிமைக் கல்வியை பயில துடித்த மாணவர்களின் கல்விச்சுதந்திரம் பறிக்கப்பட்டது அன்று. இதனால் இன்று 25 மில்லியன் செலவுசெய்யும் அரசு 2500 மில்லியன் செலவு செய்து பல பல்கலைக்கழகங்களைத் திறந்து படிக்கும் மாணவசமுதாயத்தை தொடர்ந்து படிக்க அனுமதித்திருந்தால் இந்நிலை வந்திருக்கமாட்டாது. இத்துடன் இலங்கையில் சனத்தொகையைக்கட்டுப்படுத்தும் முறைகளை 95 வீதம் பின்பற்றுவது வடக்கு, கிழக்கு பகுதிகளில், அதிகூடிய மக்கள் தினமும் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள் இது நீடிக்குமாயின் சில வருடங்களின் பின் இளைஞர்களைக் காண்பது அரிதாகிவிடும். இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

ஒன்று வெளிநாட்டுப் பயணம். இரண்டு கொலைகளுக்கு உள்ளாதல். அத்துடன் தற்போது தமிழ்பேசும் பிரதேசத்தில் ஒருஆணுக்கு ஐந்துபெண்கள் என்றவிகிதத்தில்உள்ளது. மேலும் இவ்விகிதம் அதிகரிக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றது. இதனால் ஆண்கள் பாடசாலைகள் பல மகளிர் பாடசாலைகளாக மாற்றப்படவேண்டிய அவசியமும் ஏற்படும் என்பதைக் கூறிக்கொள்கின்றோம்.

இலங்கையின் இனப்பிரச்னை 1983ஆம் ஆண்டு ஜூலைமாதம் தொடங்கி மிகவும் உச்சக்கட்டத்தை அடைந்துள்ளபோது தமிழ்பேசும் மாணவர்கள் தங்களின் பிறப்புரிமைக்கல்வியினைப் பயில துடித்தும் பயன் ஏதுமின்றி தவிப்பதற்கான நிலைமையை அரசாங்கம் தொடர்ந்து ஏற்படுத்திக் கொண்டு வருவதையும் மேற்கொள்ளும் நடவடிக்கைகளையும் தருகின்றோம்:

மாணவர்கள், ஆசிரியர்கள், உத்தியோகத்தர்கள் சுதந்திரமாக வீதியிலே நடமாட முடியாத வேளையில் பல துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டனர். அத்துடன் கைதுசெய்யப்பட்ட மாணவர்கள் 'பயங்கரவாதச் சட்டம்' என்ற ரீதியில் எவ்வித விசாரணையுமின்றி சித்திரவதைகளுக்கு மத்தியில் தென்பகுதியில் பல இடங்களில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் தமது தாய் தந்தை, சகோதரர்களைப்பார்ப்பதற்கு அனுமதியின்றி தவித்தார்கள். அப்படிப் பார்ப்பதாயின் பல இடங்கள் சென்று, பல கடிதம் வாங்கித்தான் தன் சொந்தப் பிள்ளையைப் பார்க்க அனுமதியளிக்கப்படும். சிலவேளைகளில் அனுமதி இராணுவ முகாமில் மறுக்கப்படுவதும் உண்டு. இவ்வாறு பல மாதக்கணக்கில் விசாரணை எதுவும் இன்றித் தடுத்து வைக்கப்பட்டு இருக்கும் மாணவர்கள் உடலியல், உளவியல் ரீதியாகப் பெரிதும் பாதிப்படைந்துள்ளார்கள்:

தமிழ்ப் பிரதேசத்தில் சுதந்திரத்திற்காகப் போராடிக்கொண்டிருக்கும் வாழ்க்கையில் விரக்தி தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு அரச இராணுவம் முகம்கொடுக்க முடியாமல் தாக்குதல் முடிவடைந்தவுடன் அப்பாவிமக்களைப் படுகொலை செய்வதிலும், பெண்களின் மீது பலாத்காரம் புரிவதிலும், ஒன்றுமறியாத அப்பாவி இளைஞர்களைப் பயங்கரவாதிப் பட்டம் சூட்டி கைதுசெய்வதுடன் தமிழ்மக்களின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கும் நோக்கத்துடன் வீடுகள், கடைகள், ஸ்தாபனங்கள், வாகனங்கள் போன்றவற்றை அடித்து நொறுக்கியும், தீமூட்டியும், கொள்ளையடித்தலும் வழமையான சம்பவங்கள்.

வசாவிளான் மகாவித்தியாலயத்தில் புகுந்த இராணுவத்தினர் அங்கு இருந்த விடுதி மாணவர்களை அடித்ததுடன் அவர்களுக்குப் பொறுப்பான ஆசிரியர் பலமாகத் தாக்கப்பட்டதுடன் எல்லோரையும் முகம் குப்புறப்படுக்க வைத்து சுடப்போவதாக மிரட்டிவிட்டு சென்ற சம்பவத்தின் போது மறுபகுதியில் மகளிர் விடுதி இருந்தது. அதில் இருந்தவர்கள் ஓடியதனால் அவர்களுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படவில்லை. இதேபோன்று இளவாலையில் பாடசாலைவேளையில் பாடசாலைக்குள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தினால் மாணவ மாணவிகள் மிகுந்த கலக்கம் ஏற்பட வேண்டிய நிலை உருவாகியது. இவ்வாறு பாடசாலை எல்லைக்குள்ளும் இராணுவத்தின் அடாச்செயல் நீடித்துள்ளது.

இலங்கையின் கல்விக்கொள்கையில் உள்ள மிக முக்கிய குறைபாடு திறமைக்கு முதலிடம் கொடுக்காமல் பிரதேச ரீதியாகவும், இனரீதியாகவும் உயர்கல்விக்கு தெரிவு செய்வதனால் கஷ்டப்பட்டு திறமையாக சித்தியெய்திய மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாத மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்ல முடியாத சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்தியுள்ளது. இதன் காரணத்தால் பல மாணவர்கள் தற்கொலை செய்வதும்உண்டு. மேலும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் விரக்தியடைந்து வாழ்க்கையை வெறுக்கும் நிலை நீடித்துக்கொண்டு வருகின்றது.

இலங்கையின் ஆயுதப் படையினர் முதலில் ஆசியாவிலுள்ள நூல் நிலையங்களில் சிறந்த நூல் நிலையத்தில் ஒன்றானயாழ் பொதுநூலகத்தைதீமூட்டுவதில் தொடங்கிய பண்பாட்டுப் படுகொலையினால் ஒரு லட்சம் கிடைத்தற்கரிய நூல்கள் சாம்பலாகியது. அன்றிலிருந்து இலங்கையின் இராணுவத்தினர் எங்குத் தீமூட்ட ஆரம்பிக்கும்போது முதலில் புத்தகங்களை எரிப்பது வழக்கம். ஏனெனில் அதன் அருமை அவர்களுக்குத் தெரியாது. ஆனால் மிகவிரைவாக எரியும் என்ற ஒரு சிந்தனையினால்தான் அவர்கள் அவ்வாறு செய்கின்றார்கள்.

பல்வேறு சம்பவங்களில் பாடசாலை மாணவர்கள் இம்சைப்படுத்தப்பட்டுள்ளார்கள். சில இடங்களில் தேடுதல் வேட்டை நடத்தும்போது பல மாணவர்கள் எவ்வித காரணமும் இன்றி கைது செய்யப்படுதல், மற்றும் பாடசாலைக்குச் செல்லும் பல மாணவர்கள் (பாடசாலைச் சீருடையில் இருக்கும்போது) வீதியில் இராணுவத்தினால் கைதுசெய்யப்பட்டு பின் சில வேளைகளில் பல சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அறியாத இடங்களில் இறக்கிவிட்டுச் செல்வதும் உண்டு.

(5ம் பக்கம் பார்க்க)

இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு

றேயல்

கோப்பி

சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு -13

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ஐ. இ. வி. கழக விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

கரவெட்டி ஐக்கிய இளைஞர் விளையாட்டுக் கழகத்தினரின் விளையாட்டுப் போட்டி நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

## பின்னுறுதிக் கட்டளைபற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

தெல்லிப்பழை குரும்பசிட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சிவனேந்திரன் என்பவரின் மரணசாதனமற்ற மரணச் சொத்துக்களின் விடயத்தில்.

—மரணமெய்தியவர்

மரணசாதன நியாயதிக்கம் } இல. ரி/236

தம்பிப்பிள்ளை சிவனேந்திரன் கைம்பெண் இராதா குரும்பசிட்டி, தெல்லிப்பழை

—மனுதாரர்

எதிர்

1. சிவனேந்திரன் இராகுலன் (பராயமற்றவர்)
2. சிவனேந்திரன் மகள் ஆரணி (பராயமற்றவர்)
3. சிவனேந்திரன் மகள் நளினி (பராயமற்றவர்)
4. தம்பிப்பிள்ளை துரைரத்தினம் (பராயமற்ற 1-3 ம் எதிர்மனுதார்களின் வழக்குப் பாதுகாவலர் எல்லோரும் குரும்பசிட்டி, தெல்லிப்பழை

எதிர்மனுதார்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட மரணமெய்தியவரின் மரணச்சொத்துக்களை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவரேனும் 1985-ம் ஆண்டு ஆவணி மாதம் 28-ம் திகதி முற்பகல் 8-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி இவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றான கட்டளையாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.


1985ம் ஆண்டு ஆவணி மாதம் 02 திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

ஆழ்வார் சிவபாதசுந்தரம்
பதிவாளர்

வரைந்தவர்.

ம. ஸ்ரீதரன்
மனுதாரின் சட்டத்தரணி,
4844

SIVA PRODUCT SI
இழந்த சக்தியை மீண்டும் பெற டாக்டர்கள் சிபாரிசு செய்வது உயிர்சக்தி நிறைந்த
றேயல் குளுகோஸ் டீ
இறக்குமதி செய்து அடைத்து விநியோகிப்போர்.
சிவா இன்டஸ்ட்ரீஸ்
22-1/1, ஆதம்லி பில்டிங் ஆட்டுப்பட்டித்தெரு
கொழும்பு - 13
தொலைபேசி, 26679


S.K.PHOTO
றேயல் குளுகோஸ் டீ அரசஉணவு மருந்துச் சட்டத்தின்கீழ் உத்தரவாதப்படுத்தப்பட்டது.

# தமிழ் மாணவரின் துயரம்.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

1983 ஜூலை மாதம் தமிழ் பிரதேசத்தில் மாணவர்கள் உட்பட அப்பாவி மக்கள் பல நூற்றுக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு வீதியில்போட்டு கொழுத்தப்பட்டதனுல், சிதைக்கப்பட்டதனுல், சடலங்களை அடையாளம் காணமுடியாது இறந்த சம்பவங்கள் பல தடவைகள் முன்னரும் நடந்துள்ளது.

இதேசமயத்தில் மானிப்பாயில் மினிபஸ் பிரயாணிகள் வரிசையாக நிறுத்தப்பட்டு சுடப்பட்டபோது ஆறு பாடசாலை மாணவர் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டார்கள். மற்றும் அரசின் வெலிக்கடைச் சிறைச்சாலையில் முதலில் 33 சிறைக் கைதிகளும், பின்னர் அடுத்தநாள் 20 சிறைக்கைதிகளும் படுகொலை செய்யப்பட்டபோது அதற்கு அரசு நீதிவிசாரணை செய்து விடுத்த அறிக்கை சிறைக்கைதிகளுக்கு இடையில் நடைபெற்ற கலவரத்தில் கொலையுண்டார்கள் என்று கூறியது ஆனுல் 53 பேர் இறக்கும்போது ஏன் ஏனைய கைதிகளில் பெருந்தொகையினர் இறக்காது தப்பித்துக்கொண்டது எவ்வாறு? இவ்வாறு தான் 1948 இற்கு பின்னர் தமிழ் பேசும் மக்கள் அநியாயமாக அழிக்கப்பட்டு வந்துள்ளார்கள். இதை அரசு தடுக்கவோ அல்லது இதனை தடுக்கு முகமாக நீதிவிசாரணை நடைபெற்றதும் இல்லை. எவருக்கும் நஷ்டஈடும் வழங்கப்பட்டதும் இல்லை.

1984-ம் ஆண்டு அக்டோபர் மாதம் வடபகுதியில் (பருத்தித்துறை) உள்ள மிகச்சிறந்த பாடசாலைகளில் ஒன்ருகிய ஹாட்லிக் கல்லூரி அதற்குப் பக்கத்தில் கூட்டு முகாமில் உள்ள ஆயுதப்படையினரால் தீ மூட்டப்பட்டது. அதனுல் பாடசாலையில் நூல் நிலையமும், கட்டிடம், தளபாடம் பெருமளவு சேதமடைந்தது. அப்பாடசாலை பல மாதமாக மூடப்பட்டிருந்து பின்னர் மாணவர்கள் சாத்வீக முறையில் உண்ணுவிரதம் இருந்தும் ஜனுதிபதிக்கு மகஜர் அனுப்பியும் பின்னர் ஜனுதிபதியினுல் உடனடியாக வேறு இடத்திற்கு இராணுவ முகாம் கொண்டு செல்லப்படும் என உறுதிமொழி அளித்துப் பல மாதங்கள் ஆகியும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணத்தினுல் அதற்கு அதற்கு அண்மையிலுள்ள மெதடிஸ் பெண்கள் பாடசாலையும் இயங்கமுடியாது மூடப்பட்டுள்ளது. மற்றும் வல்வெட்டித்துறையிலுள்ள சிதம்பராக் கல்லூரியின் விளையாட்டு மைதானம் இராணுவத்தினரின் பாவனைக்கு எடுக்கப்பட்டதால் தற்போது அப்பாடசாலை மூடவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இதேபோன்று முல்லைத்தீவு மாவட்டத்தில் பல பாடசாலைகள் தடைசெய்யப்பட்ட (கொக்கிளாய், நாயாறு) பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டதினுலும், அங்கு பல பாடசாலைகள் பல மாதங்களாக அகதிகள் முகாமாக மாறியுள்ளதினுலும் அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்விச் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது.

மன்னுர் மாவட்டத்தை எடுத்தால் மீன்பிடிப்பதற்குப் பெயர்போன பேசாலை போன்ற கரையோரக் கிராமங்கள் கடலடைப்புச் சட்டத்தினுலும், கண்காணிப்பு வலயத்தினுலும் தமது தொழில்களை இழந்து வறுமையின் கோடுமையினுல் நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார்கள். செல்லும் வழியில் பலர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டும், கொலை செய்யப்பட்டும் உள்ளார்கள். இவ்வாறு செல்வதினுல் மக்கள் இல்லாத பல இடங்களை மன்னுரில் அவதானிக்க முடிகிறது, இதனுலும் மாணவர்கள் பிறப்புரிமைக் கல்வியைத் தொடர்ந்து பயிலமுடியாது ஓடவேண்டிய பரிதாப நிலைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

இதேபோன்று திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டத்திலும் பல பாடசாலைகளில் மாணவர்கள் வரவு மிகக் குறைவாகக் காணப்படுவது ஏனெனில் பெற்றோர் அச்சத்தின் காரணத்தினுல் அனுப்புவதில்லை அதேவேளையில் மட்டக்களப்பில் அரசினுல் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட இனக்கலவரங்களினுல் தமிழ், முஸ்லிம் மக்கள் அகதிகளாக மாறவேண்டிய நிலை உருவாகியது. இதனுல் இன்று பலபாடசாலைகள் அகதிகள் முகாமாகவே உள்ளது. இதேபோன்று திருகோணமலையிலும் பல கோயில்கள், பாடசாலைகள் தேவாலயங்களிலும் மக்கள் அகதிகளாக உள்ளனர். இதன் காரணத்தினுல் அப்பகுதி மாணவர்களின் கல்வி படிப்படியாக சீர்குலைக்கப்பட்டு வருகின்றது.

மிக அண்மையில் வல்வெட்டித்துறைக் கூட்டுப்படையினரின் வன்செயல்களினுல் ஒரு சிறிய நூல்நிலையக் கட்டிடத்திற்குள் 25 க்கு மேற்பட்ட மாணவர்கள் உட்பட பல இளைஞர்கள் அடைக்கப்பட்டு, குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டபோது தலைவேறு, கால்வேறு, கைவேறுகச் சின்னபின்னமாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இது வடபகுதியில் நடைபெற்ற இரண்டாவது சம்பவமாகும். (முதலாவது சம்பவம் சுன்னுகத்திலுள்ள பொலிஸ் நிலையக் கட்டிடத்திற்குள் 10க்கு மேற்பட்ட இளைஞர்கள் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

பின்னர் 37 பேருக்குமேல் சுட்டுத்தள்ளப்பட்டார்கள். இது வடமராட்சியில் நடைபெறும் வழமையான சம்பவமாகும். இதன் போது கொலையுண்ட மாணவர்கள் உட்பட 77 பேருக்கு ஒழுங்கான முறையில் அவர்களின் இறுதிக் கிரியைகள் செய்யக்கூட சுதந்திரம் இழந்து வாழவேண்டிய சூழ்நிலை இப்பகுதி மாணவர்களின் கல்வியை திட்டமிட்டு நசுக்கும் செயலாகவே இது அமைந்துள்ளது இதனைத் தொடர்ந்து நெடுந்தீவில் இருந்து குமுதினிப் படகில் பயணம் செய்த அப்பாவி மக்கள் 38 பேருக்கு மேல் வெட்டியும், குத்தியும், சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள். இதில் நெடுந்தீவு பாடசாலை மாணவர்கள் பலர் அடங்குவர் இத்துடன் பல வயது முதிர்ந்த ஆண்கள், வயது முதிர்ந்த பலபெண்கள், ஒரு பச்சிளங் குழந்தையும் அடங்குவர். இதனுல் தீவுப் பகுதி பாடசாலைகளில் ஆசிரியர் இன்மையினுலும் உணவு, எரிபொருள் கிடைக்காமையினுலும், பொருளாதார நெருக்கடியால் பாடசாலை இயங்காது இப்பகுதி மாணவர்களின் கல்விச் சுதந்திரம் பறிக்கப்பட்டு வாழும் பரிதாப நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

எனவே தமிழ் பேசும் பிரதேசத்தில் அரசின் திட்டமிட்ட மிலேச்சத்தனமான இராணுவ நடவடிக்கையினுல் கிட்டத்தட்ட ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகதிகளாக அல்லது உடைமைகள் இழந்து வேறு ஒருவரின் தயவில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணத்தினுல் மாணவர்கள் தமது பிறப்புரிமைக் கல்வியைத் தொடர்ந்து பெற போராடிக் கொண்டிருக்கின்ருர்கள். மேலும் அயல் நாட்டில் (இந்தியா) ஒருஇலட்சத்திற்கு மேற்பட்ட மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஐம்பதாயிரத்திற்கு மேற்பட்ட தமிழ் பேசும் மக்கள் அகதிகளாக வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ் பேசும் மாணவர்கள் அன்றும் இன்றும் என்றும் அழிக்கமுடியாத கல்வியைத் தொடர்ந்து தமது சொந்த மண்ணில் சுதந்திரமாகப்பயிலவும், மக்களின் முதலீடு, பொழுதுபோக்கு, தமது பிள்ளைகளைக் கல்வியிலே முன்னேற்றும் அச்சுதந்திரத்தைப்பாதுகாக்கவும் திறமைக்கு முதலிடம் கொடுத்து உயர் கல்வியின் பாரபட்சத்தை நீக்கவும் மாணவர்களை மாணவர்களாக வாழ விடவும், அச்சத்தினுல் வெளியேறிய மாணவர்கள் மீண்டும் இங்குவந்து சுதந்திரமான முறையில் கல்விபயிலும் சூழ்நிலை உருவாக்கவும் பல்கலைக்கழக தேர்வு முறையிலுள்ள குறைபாட்டைமுற்ருக நீக்கவும், அத்துடன் இந்நிலைமை இனிவராதிருக்க இனம் அழிந்து செல்லும் தமிழினத்தைப் பாதுகாக்கவும், அவர்களின் கலாச்சாரம், பாரம்பரியம் என்பவற்றைத் தொடர் பேணவும், அவர்களின்சொந்த மண்ணிலே அச்சமின்றி சுதந்திரமாக வாழவும், ஒவ்வொருவரும் நான் பிறந்தமண்என்று கூறுங்சுதந்திரத்தைப்பேணவும் தமதுசொந்த இருப்பிடத்தை விட்டு வெளியேற்றப்பட்ட மக்கள் தமது இருப்பிடத்திற்கு (பாரம்பரிய) திரும்பவும் உயிருக்கு உத்தரவாதத்துடன் மீண்டும் குடியேறவும், சகல அகதிகள் முகாமாக உள்ள பாடசாலைகள் அனைத்தும் மீண்டும் இயங்கவும் (பாடசாலைக்கண்மையில் உள்ள அனைத்து) இராணுவ முகாம்களும் வடபகுதியில் இருந்து அப்புறப்படுத்தப்படசகலதையும் தொடர்ந்து அதே இடத்தில் இயங்க வழிசெய்யவும், பாடசாலைக்கு ஒழுங்காக ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் ஊழியர்கள் செல்லும் சூழ்நிலையை உருவாக்கவும் இதே பிரச்சனைகள் மீண்டும் உருவாகமல் இருக்க சர்வதேச ரீதியில் ஒரு விசாரணை ஒன்று செய்யப்படுவது அவசியமானது அதாவது 58-ம்ஆண்டுக்குப்பின் நடைபெற்ற முழுச் சம்பவங்களையும் விசாரணை செய்தல், அல்லது குறைந்தபட்சம் இனப்பிரச்சனை உச்சக்கட்டத்தை அடைந்த 83-ம் ஆண்டு பின்நடைபெற்ற சம்பவங்களையாவது நீதிவிசாரணை செய்து அதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிப்பதுடன் இனிமேலும் இப்பிரச்சனை ஏற்படதவாறு தமிழ் பேசும் மக்களுக்குநியாயபூர்வமான தீர்வை ஏற்படுத்தி அவ் இனத்தை அழியவிடாது காப்பாற்றவும்.

இந்த மகஜரின் பிரதிகள் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, கலவான எம். பி. திரு சரத் முத்தெட்டுவேகம, இலங்கையிலுள்ள சோவியத், அமெரிக்க, பிரிட்டன் தூதுவர்கள், தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. ராமச்சந்திரன் எதிர்க்கட்சித் தலைவர் திரு. மு. கருணநிதி ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டது. இதுபற்றிய செய்தி கடந்த சனிக்கிழமை வெளிவந்தது தெரிந்ததே.

## இராமநாதன் சீமாட்டி நினைவு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள், இம் மாதம் 9-ம் திகதி பிற்பகல் 3 மணிக்கு லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் உப வேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. (மா)

## கம்பன் விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைக்கம்பன் கழகத்தின் கம்பன் விழா வரும் 9, 10, 11ம் திகதிகளில் நல்லைஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவிருக்கின்றது.

## மாவட்ட சபை ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அமைதி முறைகளையும், ராணுவத்தையும் இணைத்துப் பயன்படுத்துவதன் மூலம் தீவிரவாதத்தை ஒழிக்க அரசாங்கம் விரும்புகின்றது. ராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கைகளை அரசாங்கம் தற்காலிமாக நிறுத்தியிருக்கின்றது ஏனென்ருல் போர்நிறுத்தத்துக்கான ஒப்பந்தம் ஒன்று நடைமுறையில் இருக்கின்றது' எல்லாத்தரப்பினரும் அமைதி வழியில் தீர்வொன்றைக் காண்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ந்துவருகையில், சில சக்திகள் இந்த ஒப்பந்தத்தை மீறவும் செய்கின்றன'' என்று திரு. ஜெயவர்த்தன கூறினுர். அவர் தெரிவித்துள்ள கருத்துக்களின் விபரம் வருமாறு:-

தாக்குதலுக்குள்ளாகுபவர்களைப் பாதுகாக்க நாம் நடவடிக்கைகள் எடுத்து வருகின்ருேம். திம்பு பேச்சுக்களுக்கு நம்பிக்கையோடு நாம் செல்கின்ருேம்.

### மாவட்ட சபைகளின் அதிகாரம்

நாட்டில் தெரிவுசெய்யப்பட்டுள்ள மாவட்ட சபைகளுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதைச் சுற்றியே பேச்சுக்கள் நடைபெறும். தனி நாட்டுக் கோரிக்கை (ஈழம்) தீவிரவாதம் வேறு விதமான வன்முறைகள் கைவிடப்படுமாஞல் ஒரு மாகாணத்திற்குள் உள்ள அச்சபைகள் விரும்பினுல் தமது நடவடிக்கைகளை ஒருங்கிணைத்துக்கொள்ள அனுமதிக்கப்படும்

எந்த ஒரு தீர்வும் ஒற்றை ஆட்சிமுறையின் கீழேயே ஏற்படுத்தப்படும்.

### சிங்கக்கொடி

சிங்கக்கொடியை இலங்கையின் தேசியக்கொடியாக அங்கீகரித்தல்வேண்டும். சிங்களம் அரசகரும மொழியாக இருக்கும். தமிழ் தேசிய மொழியாக இருக்கும். நாட்டின் பிரஜைகள் சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் தாம் விரும்பும் பகுதியில் வாழ உரிமை இருக்கும்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவதை அரசு எதிர்க்கிறது. இது பிரிவினைக்கு வழிவகுக்கும். இதன் காரணமாகவே ஐ. தே கட்சி பண்டா செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்தது

1977ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தனிநாடு கோரி வேட்பாளர்களை நிறுத்திய தமிழர் விடுதலைக் கூட்டணிக்குக் கிடைத்த வாக்கு விபரங்களை சுட்டிக்காட்டிய ஜனுதிபதி அக்கட்சிக்கு வாக்களிக்காத அனைவரும் தனி நாட்டுக் கோரிக்கையை எதிர்த்துள்ளார்கள் என்ருர். இதன் அடிப்படையிலேயே திம்பு பேச்சுக்களில் அரசாங்கம் கருத்துக்களை முன் வைப்பதாகத் தெரிவித்தார்.

இப்பேச்சுக்களின் மூலம் இந்த அரசு சிறுபான்மையோருக்கு விரோதமானது, அமைதித்தீர்வில் விருப்பமில்லாதது என்ற பிரசாரத்தை முறியடிக்க முடிந்துள்ளது என்ருர்.

சிறுபான்மையோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சிறுபான்மை மக்கள் உரிமைகளுக்கான ஆணைக்குழு ஒன்றை ஏற்படுத்த உத்தேசித்திருப்பதாகவும் அவர் சொன்னுர்.

அரசசேவைகளில் இன விகிதாசாரப்படி ஆட் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்றும் கல்வித்துறையிலும், பல்கலைக் கழகப் பிரவேசத்திலும் இதே முறை கடைப்பிடிக்கப்படும் என்றும் சொன்னுர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசுஉறுதிப்படுத்தவேண்டும்"

## கண்டி அஸ்கிரிய பீடாதிபதி கோரிக்கை

(கண்டி)

''யாழ்ப்பாணம்நாகவிகாரையிலிருந்து தீவிரவாதிகள் ஆரம்பித்த பௌத்தவிரோத நடவடிக்கைகள் இன்று அனுராதபுரத்துக்கும் கிழக்கிலங்கையிலும் பரவியுள்ளது. மிக விரைவில் இது கண்டிப் பகுதிக்கும் பரவும் அபாயம் தோன்றியுள்ளது''.

கண்டி அஸ்கிரிய பீடாதிபதி வண பலிபான ஸ்ரீ சந்தானந்தா மகாநாயக்க தேரோ மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

திம்பு பேச்சுவார்த்தைகளின் பலாபலன் எந்தவகையில் அமைந்தாலும் நாட்டின் சகல பகுதிகளிலும் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிமிக்கதாக பலப்படுத்த உடனடி நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறு அவர் அரசிடம் கோரியுள்ளார்.

அக்கோரிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது: வடக்கிலும், கிழக்கிலும் அன்றாடம் தீவிரவாதிகள் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் அப்பாவி மக்கள் கொல்லப்படுகிறார்கள். கொள்ளை, தீவைப்பு சம்பவங்களும் தொடர்கின்றன. இது பெரும் வேதனை தரக்கூடிய விஷயமாகும்.

திருகோணமடு விகாரையில் பௌத்த குருமார் இனந்தெரியாதவர்களினால் கொல்லப்பட்டுள்ளனர். பௌத்த இன மக்கள் இதனால் கொதிப்படைந்துள்ளனர்.

இன்று வடக்கில் பௌத்த விகாரைகள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளன கிழக்கிலும் இத்திட்டம் தொடர்ந்து செயற்பட்டுவருகிறது

இந்த நாட்டிலுள்ள பௌத்த புனிதத் தலங்கள் அனைத்தையும் தீவிரவாதிகள் நிர்மூலமாக்கத் திட்டமிட்டுள்ளதாக அறிகிறோம் எனவே அரசு இனியும் இவ்விடயம் குறித்து கவலையீனமாக இருக்காமல் பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதிப் படுத்த வேண்டும்

பௌத்த மக்கள் வாழும் பிரதேசங்கள், வீடுகள், உடமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் மக்கள் அமைதியாகவும் நிம்மதியாகவும் வாழ வழி செய்யவேண்டும்.

திம்பு மகாநாட்டின் பலாபலன்கள் எப்படியும் அமையலாம். அதுபற்றி பிறகு ஆலோசிப்போம். இப்போது நாட்டையும், மக்களையும் பாதுகாக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்வோம்

சிறைக் காவலில் உள்ள தீவிரவாத சந்தேக நபர்களில் 600 பேர் விடுதலை செய்யப்படவுள்ளனர். அவர்கள் விடுவிக்கப்பட்டால் அதன் பின்னர் ஏற்படக் கூடிய விளைவுகளை அரசு எண்ணிப் பார்க்க வில்லையா? விடுதலையாவோர் மீண்டும் தீவிரவாத முகாம்களுக்குச் செல்லமாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது?

இன்று தீவிரவாதிகளின் இலட்சியம் படிப்படியாக நிறைவேறுகிறது. சிங்கள பௌத்த மக்கள் தமது தாய் நாட்டில் படிப்படியாக அடிமைகளாகிவருகின்றனர். இந்த நிலையை நீடிக்கவிட முடியாது

அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கத் தவறினால் சிங்கள பௌத்த இனம் ஒன்றிணைந்து நாட்டையும், இனத்தையும் பௌத்த சாசனத்தையும் பாதுகாத்துக்கொள்ளும் பணியில் இறங்க வேண்டிய சூழ்நிலை தோன்றுவதை எவராலும் தடுக்கமுடியாதுபோகலாம். [க]


## மேற்கு பேர்லின்/பிரான்ஸ்

பிரயாணங்கள் AUGUST 15,22 திகதிகளில் எமது பிரதிநிதி உங்களை யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச்செல்கின்றார்.

மற்றும் சகல விமான டிக்கட்டுகளுக்கும் விசா, பாஸ்போட், பொண்ட் என்பனவற்றிற்கும்

லிப்ருஸ் லிமிட்டெட்
(TRAVELS DEPT.)
70, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

LIBRAS LTD.,
PAUL VI CENTRE
24, FRONT STREET,
COLOMBO-1.


# இன்றைய பலன்

மாதம் - ஆடி
திகதி- 23 (7-8-85)
கிழமை- புதன்
திதி- ஸப்தமி
நக்ஷசத்திரம்- அச்சுவினி முழுநாளும்

மேடம்: இடர்கள் பலதாக்கும் இதயத்தில் எரிமலை ஏழுறும். உடல்நலமும் பாதிக்கப் படும். அமைதியுடன் இருக்கவும்.

இடபம்: தேடிய இன்பம் இன்று காலடியில் கிடைக்கும் மூத்தோர்கள் உதவிக்கும் இடமேற்படும். தெய்வவழிபாட்டில் ஆர்வம் உண்டு

மிதுனம்: ஆசாரக் குறைவிற்கும் அவசரத் தன்மைக்கும் இடமுண்டு. இன்று பூமிப் பிணக்குக்கும் இடமுண்டு தன்கையே தனக்குதவி யென்று செயலாற்றவும்

கடகம்: தன்மான வாழ்வுடன் தனமும் சேரும் தாயின் ஆதரவும் தவறாது கிடைக்கும். முயற்சியால்முன்னேற்றமுண்டு.

சிம்மம்: சந்திப்பின் மூலம் பயனுள்ள தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். காத்திருந்த கண்களுக்கு களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும்.

கன்னி: கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவங்களும் இடம்பெறலாம். தூற்றலைக் கணை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர். எதிலும் முன்யோசனை நன்று.

துலாம்: களஸ்திர சுகம் உண்டு. காதலர்களுக்கு கன குஷியான தினம். கண்ணியமான நடவடிக்கைகளிலும் ஈடுபடுவீர்கள்.

விருச்சிகம்: வெளியிடத் தொடர்புகளில் மந்தநிலை காணப்படும் தொழில் சம்பந்தமான கவலை அதிகரிக்கும். திடீர் பிரயாணத்திற்கும் இடமுண்டு

தனுசு: பிறருக்கு உதவுவதில் முன்நிற்பீர்கள் இதன் மூலம் பணமும் செலவாகும். மகிழ்ச்சிகரமான செய்திக்கும் இடமுண்டு.

மகரம்; செய்தொழில்மூலம் சிறப்புக்கள் கிடைக்கும் பெரியோர்கள் ஆசி அவசியம் உண்டு. விளையாட்டு வீரர்கள் முதலிடம் பெறுவர்.

கும்பம்: புதியதொழில்மூலம் இலாபம் கிடைக்கும். புத்திரர்களுடைய செல்வாக்கும் பெருகும். புதுமையான எண்ணங்கள் மனதில் வட்டமிடும்.

மீனம்: வேண்டாத உறவுகளைத் துண்டித்தல் நன்று. வெளியிடத்துப் பயணம் வேதனையைத்தரலாம் பொறுமையைப்பேணி நடக்கவும்.

திருமலை
– வே. ரவீந்திரன் –

# பொலிவியாவின் புதிய ஜனாதிபதி

(லண்டன்)

எழுபத்தேழு வயதான விக்டர்பாட் எச்சென்ரோ என்பவர் பொலிவியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் எந்த ஒரு வேட்பாளருக்கும் தீர்க்கமான வெற்றி கிடைக்காததால் இவர் அந்நாட்டின் காங்கிரஸ் சபையில் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்று ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார் (து)


இல்லத்தரசிகளின் சிறந்த தெரிவு
றேயல்
ஜெலி கிறிஸ்டலஸ்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு -13.






சலவைக்கு நான் இப்பொழுது
யாழ் லைற்
சோப்பையே தெரிவு செய்கிறேன்.
ஏன் தெரியுமா?

★ யாழ் லைற் சோப் சுத்தமான தேங்காய் எண்ணெயைப் பயன்படுத்தி விஞ்ஞான முறைப்படி, உயர்ந்த தரத்தில் தயாரிக்கப் படுவது. அதில் மிருகக் கொழுப்பு பயன்படுத்தப்படுவதில்லை.
★ யாழ் லைற் சோப் விரைவாக நுரைக்கிறது ஆடையின் அழுக்கை வேகமாக அகற்றுகிறது கைகளுக்கும் ஆடைகளுக்கும் தீங்கற்றது.
★ யாழ் லைற் சோப் சிக்கனமானது குறைந்த செலவில் அதிக ஆடைகளைச் சலவை செய்யலாம்.

நிறை: 130 கிராம் விலை: ரூபா 3/25

நீங்களும் பரீட்சித்துப் பாருங்கள்!

விநியோகஸ்தர்கள்:
dyn ads marketing
476, Main Street,
Chundikuli, Jaffna.
(விற்பனையாளர்கள் தொடர்பு கொள்ளவும்)

உற்பத்தியாளர்கள்: யாழ்லைற் றேடிங்ஸ்,
சிவன் ஒழுங்கை, [illegible]



வகுப்புகள் ஆரம்பம் 9-ந் திகதி

சிற்றி அன் கில்ஸ் ஒவ் லண்டன் இன்ரிரியூட்
(CITY AND GUILDS OF LONDON INSTITUTE
எலக்றிக்கல் என்ஜினியரிங் பிறக்ரிஸ் பரீட்சை பாஸ்பண்ணி
ரெக்னிசன் என்ஜினியராகவும்
எலெறிக்கல் வயரிங் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்கு
ஏற்ப சிறந்த முறையில் பயிற்றப்படும்
தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
இ. கணேசலிங்கம்,
'இரத்தினவாசா',
(சங்கானை சாந்தி சினிமாவிற்கு அருகாமையில்)
(4897)


# நினைவஞ்சலி

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரம
முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமி ஜீ

தோற்றம்:
26-09-1913



சிவபதம்:
24-07-1985

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆனந்தாச்சிரமத்தின நிர்வாகியாகிய முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிஜி அவர்களின் அஸ்தி வைத்து சமாதி நிறுவுதல் 08-08 85 காலை 10 மணிக்கு நடைபெறும் என அன்பர்களுக்கும் அடியார்களுக்கும் அறியத்தருகின்றோம்.

இங்ஙனம்
ஆச்சிரம அன்பர்கள்.

(4881)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஸ்ரான்லி மினி**
5'X5' திரையில்
10-30, 12-30, 2-30
4-30, 6-30
**"SHE"**
மந்திரஜாலங்கள்
குதிரை ஓட்டம் நிறைந்த
படம்

**லிபேர்ட்டி மினி**
வெலிங்டன் சந்தி
அருகாமை
தினசரி 10-30,12-30,2-30,
4-45,
I SPIT ON YOUR GRAVE
வயது வந்தவர்கள் மட்டும்

**குமரன்**
**மினி சினிமா**
10-30, 2-30, 4-30, 6-15
Charles Bronson
**Fake-Out**
(வயது வந்தோருக்கு
மட்டும்)

**ஹரன் சினிமா**
10-30, 2-30
ஜெய்சங்கர்—பானுமதி
**மேஜர் மீனாட்சி**
(புதியபிரதி கலர்)

**ஹரன் மினி**
தினசரி 10-30, 2-30, 6-30
M. G. R. சரோஜாதேவி
நம்பியார் நடித்த
**கலங்கரை விளக்கம்**
புதிய கொப்பி

**வின்ஸர்** (யாழ்)
Daily 10-30, 2-00, 4-30,
7-00
கடைசி இரு தினங்கள்
மட்டும்.
**CAT PEOPLE**

**S.T.L. மினி சினிமா**
திருநெல்வேலி
Daily 5 Shows
**UNDER FIRE**
(War Film)

**உஷா மினி**
(கே. கே. எஸ். வீதியில்)
10-30, 2-30, 4-30, 6-30
**Under Fire**
இன்னும் 2 தினங்கள்
மட்டுமே!
தவறவிடாதீர்கள்.

**மே(f)பெயர் மினி**
**சினிமா**
(கன்னாதிட்டி காளிகோவில்
அருகில்)
10-30, 4-45, 7-00
**"Basket Case"**
தன் உடலில் ஒட்டிப்
பிறந்த ஒரு அரை உருவம்
கொண்ட பயங்கர ரகுலா
வின் திகில் நிறைந்த கதை.

**மொடேர்ண்**
**மினி சினிமா**
ஸ்ரீலங்கா அச்சகலேன்
ராஜாதியேட்டருக்கு
அருகாமையில்
தினசரி 4 காட்சிகள்
'BUTTERFLIES'
வயதுவந்தவர்கள் மட்டும்)

**"லதா" மினி**
(கோண்டாவில்)
10-30, 3-30, 6-45
ரஜனிகாந்-ஸ்ரீபிரியா
**பில்லா**

**ராஜா தியேட்டர்**
யாழ்ப்பாணம்
இன்று மட்டும்
தினசரி 10-30, 2-30,
4-30, 6-00
SUPER SNOOPER
(முழு நீளசிரிப்புச்சித்திரம்)

**சரவணபவன்**
**மினி சினிமா**
4 x 4 திரையில்
10-30, 2-30, 4-30, 7-00
007 James Bond
**Gold Finger**

**பாலகன் V V.**
(சாந்தி முன்பாக)
10-30, 12-30, 2-30,
4-30, 6-30
**LONE WOLF MCQUADE**
முகாம் தாக்குதல்
நிறைந்த சண்டைப்படம்

**நியூ சினிமாலயா**
R.G. பில்டிங் (மேல்மாடி),
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
07-08-85
10-30, 2-30, 6-00 மணி
கமலஹாசன்-ஸ்ரீபிரியா
வை ஜீ மகேந்திரன்,
மனோரம்மா,
வெண்ணிறாடை மூர்த்தி
**சிம்லா ஸ்பெசல்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்**
10-30, 2-15, 4-30,
6-45,
**Death Hunt**

**லிடோ சினிமா**
10-30, 2-15, 5-30
பாலு மகேந்திரனின்
**நீங்கள் கேட்டவை**
சவுண்ட்மன் கலர்
தியாகராஜன் (இருவேடம்
பூர்ணிமா, ஜெயராம்,
சில்க்சுமிதா, ஜெய்சங்கர்

**கஜேன்**
**மினி சினிமா**
(சத்திரச் சந்தி
அருகாமையில்)
10.30, 2.00, 6-00 மட்டும்
ஹிந்தி திரைப்பட ரசிகர்
களின் ஆவலை பூர்த்தி
செய்ய
சுப்பர் ஸ்ரார்
ரஜனிகாந் நடித்த
**GANGVAA**
ஹிந்தி கலர்

**எம்பயர்**
**ஸ்கோப் சினிமா**
(யாழ்-வைத்தீஸ்வரா சந்தி)
இன்று மட்டும்
10-30, 2-30, 6-30
அமிர்தாப்பச்சன்
[இரு வேடம்]
ஜீனத்அமன், நீட்டுசிங்
நடித்த
**'GAMBLER'**
(Hindi) (Color)
இசை:-R. D. பர்மன்
நாளை
Gim Brown நடித்த
**ELCONTAR**

## அஞ்சலி துண்டுப் பிரசுரம்

(கிளிநொச்சி)

பரந்தன் புகையிரத நிலையத்தில் எரிபொருள் பரல்கள் அபகரிக்கப்பட்ட சம்பவத்தில் ஹெலிகொப்டரில் இருந்து சுடப்பட்டு மரணமான பரந்தனைச்சேர்ந்த வீரசிங்கம் சந்திரசேகர் (சந்திரன்) மரணத்திற்குக் அஞ்சலி தெரிவித்து தமிழ்ஈழ விடுதலை இயக்கம் அஞ்சலிப் பிரசுரமொன்றை வெளியிட்டுள்ளது.

## நிர்வாகிகள்

(ஊரெழு)

உரும்பிராய் ஞானவைரவ சுவாமி கோவில் தர்மகர்த்தா சபையில் புதிய உத்தியோகத்தர்கள் தெரிவு அண்மையில் நடைபெற்ற வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டத்தில் இடம்பெற்றது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

காப்பாளர்; வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை, தலைவர்; திரு. மு. வ. இராசரத்தினம் உபதலைவர் திரு. சி. நடராசா செயலாளர்திரு அ. க. த. கிருஷ்ணராசா உபசெயலாளர் திரு. த சுதாகர், பொருளாளர்; திரு. க. அருணசலம் உபபொருளாளர்: திரு. தே. ரவிமோகன் கணக்கு பரிசோதகர்கள் திரு வே மகேஸ்வரன் திரு. சி சிவசுப்பிரமணியம்.

இல்லத்தரசிகளின்
சிறந்த தெரிவு
**றேயல்**
கஸ்ராட் பவுடர்
சிவா இண்டஸ்ரீஸ்
ஆதமலி பில்டிங்
கொழும்பு-13

**நியூ சாந்தி மினி**
10-30, 12-30, 2-30, 6-30
"LASER BLAST"
New Release)
Full of Action and Horror
பயங்கர சண்டைக் காட்சி
கள் நிறைந்த படம். கண்
டிப்பாக வயது வந்தவர்க
ளுக்கு மட்டும்.

## அவசர வேண்டுதல்

வெளிநாட்டுப்பிரயாணத்துக்கு என்னிடம் கடவுச்சீட்டை ஒப்படைத்தவர்கள் உடனடியாக தொடர்பு கொள்ளவும். புதியவர்களும் தொடர்பு கொள்ளவும். அத்துடன் அமெரிக்கா, பிரான்ஸ், சிங்கப்பூர் ஏனைய நாடுகளுக்கும் விசா விரைவில் ஒழுங்கு செய்து தரப்படும். பிரயாணத்திற்கு உத்தரவாதம் அளிக்கப்படும். அராபியா செல்பவர்களுக்கும் அறிவுரைகளும் ஒழுங்கும் செய்துதரப்படும். மூன்று வாரத்தில் பிரயாணங்கள் மேற்கொள்ளக்கூடிய வழிவகைகள் செய்து கொடுக்கப்படும்.

அ. மகேந்திரன்,
155, குருசோ வீதி, யாழ்ப்பாணம்.
(4909)

## தேவை

Store Keeper / Clerk வேலைக்கு வெற்றிடமுள்ளது: 26 வயதுக்குக் குறைந்த ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிப்பவர் சுண்டிக்குளியிலிருந்து 3 மைல்களுக்குள் வசிப்பவராகவும் G. C. E. (O/L) பரீட்சையில் தமிழ்மொழி, கணிதம், ஆங்கிலம் உட்பட ஆறுபாடங்களில் சித்திபெற்றவராகவும் இருத்தல் வேண்டும். சொந்தக்கையெழுத்தில் பூரண விபரங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் 9-8-85 வெள்ளிக்கிழமை காலை 9-30 மணிக்கு திறன்காண் பரீட்சைக்காக நேரில் வரவும்.

**Dyn ads marketing,**
476, Main Street, Chundikuli, Jaffna.

## 31-வது நாள் நினைவஞ்லி

**செல்வி அனுராதா முத்துலிங்கம்**



படைப்பு:
1-12-1959

அழிப்பு:
9-07-1985

காலைக் கதிரென வந்தாய், எளிமையான ஏழ்மையான சுற்றம் உனதெனப் பெருமை கொண்டாய், அன்பிற்கு இலக்கணம் வகுத்தாய், பண்பிற்கு சிகரம் அமைத்தாய் ஆன்மீகத் தென்றல் எனத் திகழ்ந்தாய் ஆற்றல்மிகு ஞானக்குழந்தையென அன்பர் நெஞ்சங்களில் நிறைந்தாய் மாலை வருமுன் மறைந்தாய் பாழ் வாழ்வெனும் படுமாயை துறந்தாய்.

ஓம் சாந்தி — ஓம் சாந்தி — ஓம் சாந்தி

'அன்னை' அப்பா, அண்ணன், அண்ணி,
சாந்தி நிலைய அன்பர்.
'சாந்தி நிலையம்', கோப்பாய் வடக்கு.
(4878)

# COLOMBO - BERLIN
# விசாவுடன்
## 22, 29-ம் தேதிகளில்

**ஜேர்மனி, பிரான்ஸ்** செல்ல எல்லா ஒழுங்குகளும் உடனே செய்து தருவோம்.

★ உலகின் எல்லாப் பகுதிகளுக்கும்
**குறைந்த கட்டணத்தில்**
**விமானச் சீட்டுக்கள்**

CONFIRMATIONS, RE-CONFIRMATIONS, CANCELLATIONS
போன்ற பணிகள் யாவற்றையும் நாம் கவனிப்போம்.

**இந்தியப் பிரயாணம்:** இந்தியாவுக்கு விசா, கடவுச்சீட்டுப் புதுப்பித்தல், (ALTERATIONS, RENEWALS, BONDING) ஆகியவற்றுக்கான எல்லா ஒழுங்குகளும் யாழ்ப்பாணத்திலேயே செய்து தரப்படும்.

Dyn Ads

**MACK TRAVELS**
இல. 8, முதலாவது ஒழுங்கை,
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24791 — 24414 (Residence)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

### பதில் பீடாதிபதி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகப் புவியியல்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை பதில் கலைப்பீடாதிபதியாகப் பொறுப்பேற்றுள்ளார். (நா)

### கடத்தப்பட்டார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வர்த்தகர் சங்கச் செயலாளர் திரு. சி. நமசிவாயம் கடந்த இரவு 9 மணியளவில் இனந்தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்.

## இப்படியும் நடக்கிறது

தொலைபேசிச் சேவை என்றால் என்ன?

உள்ளூரிலோ அல்லது வெளியூரிலோ அல்லது வெளிநாடுகளிலோ தொலைபேசி அழைப்புகளை எடுத்து உதவும் சேவையை தொலைபேசிச் சேவை என்று கூறலாம்.

நமது நாட்டில் பலர் இதனை ஒரு சேவையாக மட்டுமல்ல; 'பிஸினஸா'கவும் நடத்துகின்றனர்.

உங்களிடமும் ஒரு தொலைபேசி இருந்தால் நீங்களும் 'ஓகோ' என்று இந்த 'பிஸினஸை' நடத்தலாம் எப்படி?

சுலபமான வழி! உங்களுக்கு அருகில் உள்ள தொலைபேசி இணைப்புகளில் 'கத்தரிக்கோலை' வைப்பது!

என்ன முழுசுகிறீர்கள்? சட்ட விரோதமான இந்தச் செயலை எப்படி இவ்வளவு துணிச்சலாக எழுதுவீர்கள் என்று கேட்கிறீர்கள்? நான் என்ன செய்வது. இப்படியும் ஓரிடத்தில் நடக்கிறதாம்.

அந்த சிற்றூரில் உபதபால் அலுவலகத்தின் தொலைபேசி பேசாது காரணம் வயர் வெட்டு. அருகில் உள்ள உயர் அரச அதிகாரியின் வீட்டுத்தொலைபேசியும் மௌனம் தான். காரணம் வயர்வெட்டு. இது தவிர அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் தொலைபேசிகளும் 'மூச்சு' விடாது. காரணம் வயர் வெட்டுத்தான்! ஆனால் ஒருவருடைய தொலைபேசி மட்டும் ஓயாமல்பேசுகிறதாம்.

மர்மம்! அப்பகுதியில் ஏனையோரின் தொலைபேசி வயர்கள் இணைக்க இணைக்க மீண்டும் வெட்டப்படுகிறது.

இடம்: யாழ்ப்பாணத்தில்தான்...!

"ஊடுருவி"

பஸ் பிரயாணிகள் மரண விசாரணை—

# மூன்று வெற்றுதோட்டாக்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஆலடி பஸ்தரிப்பு நிலையத்தில் நடந்த துப்பாக்கிச்சூட்டுக்கு பின்னர் அங்கு கண்டெடுக்கப்பட்ட மூன்று வெற்றுத் தோட்டாக்கள் நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டன.

காரைநகரில் துப்பாக்கிச் சூட்டுக்கு பலியான மூன்று பஸ் பிரயாணிகளின் மரண விசாரணை யாழ். நீதிமன்றத்தில் நீதவான் எஸ் நாகராசா முன்னிலையில், நேற்று நடைபெற்றது.

ஊர்காவற்றுறை பொலிஸ் பிரிவுக்கு பொறுப்பாகவுள்ள சார்ஜன்ட் எஸ். பரமேஸ்வரன் சாட்சிகளை நெறிப்படுத்தினார்.

### காயத்துடன் கிடந்தார்

காரைநகரைச் சேர்ந்த தம்பிப்பிள்ளை உதயகுமார் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: ஆலடி பஸ் தரிப்பில் கடந்த மாதம் 22ம் திகதி துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான தர்மலிங்கத்தின் மாமனாரான பொன்னுத்துரையின் லொறியில் கிளீனராக இருக்கின்றேன் அன்று காலை 5 மணிக்கு நான் வேலைக்கு அவர் வீட்டுக்குச் சென்றேன். தர்மலிங்கம் பயணம் போகிறாரென்றும், வெடிச்சத்தம் கேட்பதாகவும், போய்ப்பார்த்து வருமாறும் பொன்னுத்துரை சொன்னார். நான் அதன்பின் வெடிச்சத்தம் கேட்ட ஆலடிப்பக்கம் சென்றேன். இறந்த தர்மலிங்கம் காயத்துடன் வீதியில் கிடந்தார் தூரத்தில் வேறு ஆட்களும் காயத்துடன் கிடந்தார்கள் நான் வீட்டுக்கு திரும்பிவந்து தகவலைச்சொல்லிவிட்டு ஆலடி பஸ்தரிப்புக்கு திரும்பிச்சென்றேன் நான் போனபோது காயமுற்ற தர்மலிங்கத்தையும், மற்றும காயமடைந்தவர்களையும், யாழ். ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றிருந்தார்கள்.

### 3 வெற்றுத் தோட்டாக்கள்

இறந்த தர்மலிங்கத்தின் பயணப்பையையும் உடுப்புகளையும், அடையாளம் கண்டு அவற்றை எடுக்கச் சென்ற போது அங்கு மூன்று வெற்றுத் தோட்டாக்கள் கிடந்தன. அத்தோட்டாக்களை நான் எடுத்து. பொலிஸாரிடம் ஒப்படைத்தேன்;

### சார்ஜன்ட் சாட்சியம்

யாழ். பொலிஸ் நிலைய சார்ஜன்ட் எஸ். பாலசுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது: நான் பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவில் கடமையாற்றுகிறேன். கடந்த மாதம் 22-ம் திகதி இறந்த தர்மலிங்கத்தின் மரண விசாரணையின் போது சமுகமளித்திருந்தேன். மரண விசாரணையில் சாட்சிகளை நெறிப்படுத்தினேன், விசாரணையும் மேற்கொண்டேன்.

மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்ட சாட்சிகளின் பிரகாரம், சம்பவம் நடந்த இடத்தில் வெற்றுத் தோட்டாக்கள் காணப்பட்டதாக தெரிய வந்தது. இதன் பிரகாரம் நீதவான் வெற்றுத் தோட்டாக்களைக் கண்டெடுத்தவர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கும்படி தெரிவித்திருந்தார். அதன்படி தம்பிப்பிள்ளை உதயகுமார் நான் விசாரணையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நேரத்தில் என்னிடம் 3 வெற்றுத் தோட்டாக்களை தந்தார். அவற்றை சம்பவம் நடந்த இடத்தில் கண்டெடுத்ததாக கூறினார் நான் அந்த 3 வெற்றுத்தோட்டாக்களையும், நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்

விசாரணை நாளை வியாழக்கிழமை காலைவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

வவனியா பண்டாரிக்குளத்தில்

## வீட்டிலும் கடையிலும் பெரும் கொள்ளை!

(வவனியா)

வவனியாவிலுள்ள பண்டாரிக்குளம் என்ற இடத்தில் வீடொன்றிலும் கடையிலும் இனந் தெரியாதவர்களினால் 1 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன.

கந்தையா இரத்தினம் என்பவருக்கு சொந்தமான கடையிலும் வீட்டிலும் நேற்று முன்தினம் இரவு8மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தொலைக்காட்சிப்பெட்டி, தையல் மெசின் நீர் இறைக்கும் இயந்திரம் உணவுப்பொருள்கள் உட்பட 1 லட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

வானில் வந்த ஆயுதம் தாங்கிய 8 பேர் இக் கொள்ளையை நடத்தியதாகக்கூறப்படுகிறது.

அனுராதபுரத்திலிருந்து ————

## இடம்பெயர்ந்தோருக்கு இலவச உணவுப்பொருள்

(யாழ்ப்பாணம்)

அனுராதபுரத்தில் இடம் பெற்ற வன்முறைச்சம்பவங்களின்போது பாதிக்கப்பட்டு யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ளவர்களுக்கு இலவசமாக அரிசி, மா, சீனி ஆகிய உணவுப்பொருட்கள் வழங்குவதற்கு யாழ். செயலக சமூக சேவை பிரதிப்பணிப்பாளர் திருமதி சிவசிதம்பரம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஒரு குடும்பத்தில் யாராவது கொலைசெய்யப்பட்டிருந்தால் மூன்று மாதத்துக்குரிய உணவுப்பொருட்களும், சாதாரணமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 வாரத்துக்குரிய உணவுப்பொருட்களும் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இதற்கான அனுமதிப்பத்திரங்களைப்பெறுவதற்குத் தகுந்த ஆதாரங்களுடன் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு சமூகசேவை பிரதிப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டிருக்கிறார். (மா)

### பூஸா...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

செல்லலாகாதென்றும் மலையகப்பகுதிக்கு செல்லலாகாதென்றும் இவர்களுக்கு நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

விடுதலையானவர்கள் 360 பேர் திருகோணமலை மாவட்டத்தையும், 101 பேர் மன்னார் மாவட்டத்தையும், 20 பேர் மட்டக்களப்பையும், 6 பேர் வவனியாவையும், 6 பேர் கொழும்பையும் ஒருவர் யாழ்ப்பாணத்தையும் 36 பேர் வேறுரு மாவட்டத்தையும் சேர்ந்தவர்கள்.

செஹிவளை மத்திய மகா வித்தியாலயத்தில் இவர்கள் விடுதலைசெய்யப்பட்டனர்.

### யாழ். பல்கலைக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். பல்கலைக்கழக வேந்தர் கலாநிதி தம்பையா நடராசா பட்டங்களை வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் இது 6-வது பட்டமளிப்பு விழாவாகும்.

பட்டங்கள் பெறுவோர் எண்ணிக்கை வருமாறு:-

கலாநிதிப்பட்டம் 02. முதுகலைமாணி 12 முதுமெய்யியல்மாணி 02, பட்டப்பின் படிப்புக் கல்விச் தகைமைச் சான்றிதழ் 46, கலைமாணி 216, வணிகமாணி 68 மருத்துவ சத்திரசிகிச்சை மாணி 66, விஞ்ஞானமாணி 132. இசைக்கலைமாணி 22, நாட்டியக்கலைமாணி 05

கடந்த வருடம் இடம் பெற்றதுபோல பட்டமளிப்பு விழா இரு பிரிவுகளாக நடைபெறும். முதலாவது கலைப் பீடம் 2-வது பிரிவு விஞ்ஞான பீடம்-மருத்துவபீடம். (மா)

### யாழ். ஆஸ்பத்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதன் காரணமாக அவசர நோயாளர்களைப் பார்வையிடவும், 'வார்ட்டு' களில் அனுமதிக்கவும் எட்டு டாக்டர்களில் மூவர் மாற்று முறையில் கடமை செய்ய வேண்டி உள்ளது.

### தீவிரவாத...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

விடுதலை முன்னணித் தலைவர்களைச் சந்தித்து பேசியதாகத் தெரியவருகிறது.

இக்குழுவினர் கிழக்கு மாகாணத்தில் 33 வீதம் முஸ்லிம் மக்கள் வசிப்பதாகவும் சுட்டிக்காட்டியதுடன் வடக்கு கிழக்கு இணைவதாயின் முஸ்லிம்களின் தனித்துவம் இல்லாமல் போகும் என்றும் அவ்வாறு இணைவதாயின் சகல விடயங்களிலும் மூன்றில் ஒரு பங்கு முஸ்லிம் இனத்தவர்களுக்கு வழங்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்ததாகக் கூறப்படுகின்றது

இதற்குப் பதிலளித்த தீவிரவாதத்தலைவர்கள் தற்பொழுது உரிமைகளுக்காகவே போராடி வருகின்றோம் என்றும் உரிமை கிடைத்தபின் பங்கீடு பற்றி யோசிக்கலாமென்றும் தெரிவித்ததாகக் கூறப்படுகின்றது.

### தமிழ்நாடு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போக்குவரத்துத்துறைச் செயலாளரும் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் தலைவருமான திரு ஏ கே. வெங்கடசுப்பிரமணியம் நேற்று சென்னையில் நிருபர் மத்தியில் தெரிவித்தார்

பூம்புகார் கப்பல் போக்குவரத்துக்கழகத்திற்காக கடந்த 2 ஆம் திகதி ஜப்பானிய துறைமுகத்தில் இச்சரக்குக்கப்பலை தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி இராமச்சந்திரன் பெற்றுக்கொள்ளும் வைபவம் இடம் பெற்றது

இக்கையளிப்பு வைபவத்தில் கலந்து கொண்டு தற்போது சென்னை திரும்பியுள்ள திரு. வெங்கடசுப்பிரமணியம் இவ்வைபவம் தொடர்பான விபரங்களை நிருபர்களுக்கு விளக்கினார். 'தமிழ் அண்ணா' சரக்குக்கப்பல் எதிர்வரும் 25 ஆம் திகதி மேற்கு வங்காளத்தின் துறைமுகத்தை வந்தடைந்து, அங்கிருந்து தமிழ் நாட்டின் தூத்துக்குடி துறைமுகத்தை வந்தடையும் என்றும் அவர் தகவல் தெரிவித்தார்.

(அ)

### எம் ஜி. ஆர். அமெரிக்கா செல்கிறார்

(சென்னை)

ஜப்பானில் தற்போது தங்கியிருக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் எம் ஜி. இராமச்சந்திரன் இன்னும் ஓரிரு நாட்களில் அமெரிக்கா சென்று மருத்துவ பரிசோதனை பெறவுள்ளார். இத்தகவலை தமிழ்நாடு மாநில நிதியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் நேற்று சென்னையில் தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி புவனேந்திரராணி தில்லைநாதன்

மானிப்பாய் மூத்ததம்பி லேனைச் சேர்ந்த தம்பிராசா - தங்கம்மாவின் அன்புமகள் திருமதி புவனேந்திரராணி தில்லைநாதன் காலமானார் இவர் தில்லைநாதனின் அன்புமனைவியும், சுபாஷினியின் அன்புத்தாயாரும், கிருபானந்தன், சிவானந்தன், அழகானந்தன், கமலராணி, குருபரன், தயாபரன், சிவபரன் ஆகியோரின் சகோதரியும், இரத்தினசபாபதி, பார்வதிப்பிள்ளை ஆகியோரின் பெருமகளும், வேணியின் மைத்துனியும் ஆவார். அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (7-8-85) புதன்கிழமை காலை 10 00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

(49.4) தகவல்: த. சிவானந்தன்.

### பாகுபாடின்றி திறக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி உலவாக்குளம் பிள்ளையார் கோவில், இன்று புதன்கிழமை நண்பகல் 12மணியளவில் நடைபெறவுள்ள தீபாராதனைபூஜையுடன் சமூக வேறுபாடின்றி திறக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயப்பிரவேசப் பிரச்னை சம்பந்தமாக மேற்படி பிள்ளையார் கோவில் [illegible] குறிப்பிடத்தக்கது. (மா)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1985-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 Eelanadu P. Box 49, Telegram Eelanadu, Telephone; 22389 ,24126,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org